I 9x ma:172

உ

சிவமயம்

# ஸ்ரீ ரமணதேவ மாலை

பாரத்வாஜி

## முகவைக் கண்ண முருகனார்

இயற்றியது

ஸ்ரீ ரமணபாதானந்தரால்
வெளியிடப்பெற்றது

சென்னை 'லா ஜர்னல்' அச்சுக்கூடம்
பிரமாதி வருஷம், ஆனி மாதம்
1939

PRINTED BY R. NARAYANASWAMI IYER
AT THE MADRAS LAW JOURNAL PRESS,
MYLAPORE, MADRAS.

விலை அணா 4

சிவமயம்

# உள்ளுறை

| | |
|---|---|
| முகவுரை | v |
| சிறப்புப் பாயிரம் | xiv |
| மாலை மாற்று | |
| ஸ்ரீ ரமணதேவ மாலை | |
| மங்கலம் | க |
| விநாயக வணக்கம் | க |
| கலைமகள் வணக்கம் | க |
| சிவஸ்வரூபமாகத் துதித்தல் | உ |
| சுப்பிரமணியஸ்வரூபமாகத் துதித்தல் | ௩ |
| முன்னிலைப் பரவல் | ௫ |
| அன்னையின் பிணியை யகற்றிட வேண்டல் | ௬ |
| அன்னைக் கருள்செய் தாட்கொள வேண்டல் | ௭ |
| அனைதிரு வடியுற வவணிலை வினாதல் | ௮ |
| படர்க்கைப் பரவல் | ௯ |
| இயல்புரைத்தல் | ௯ |
| அருளிய வண்ண முரைத்தல் | க0 |
| சிந்தையறுத்த திறம்பாராட்டல் | கக |
| தலைவி கூற்று | கஉ |
| மகளிரை ஆற்றுப்படுத்தல் | கஉ |
| மடல் | க௫ |
| உறுதி யுரைத்தல் | க௫ |

| | |
|---|---|
| குருஸ்வரூபமாகத் துதித்தல் | ௧௪ |
| முன்னிலைப் பரவல் | ௧௪ |
| படர்க்கைப் பரவல் | ௨௫ |
| திருநாமச் சிறப்பு | ௨௮ |
| திருவுருச் சிறப்பு | ௨௯ |
| திருவடிச் சிறப்பு | ௨௯ |
| திருவிழிச் சிறப்பு | ௩௧ |
| தரிசனப் பயன் | ௩௩ |
| மாண்புரைத்தல் | ௩௩ |
| சமயாதீத நிலை | ௩௪ |
| ஆச்சிரம உண்மை | ௩௪ |
| உண்மைநிலை யுரைத்தல் | ௩௫ |
| நூலும் பயனும் | ௩௭ |
| மௌனோபதேசச் சிறப்பு | ௩௭ |
| பணிதற் பயன் | ௩௭ |
| நிந்தாஸ்துதி | ௩௮ |
| பெற்ற பேற்றை வியத்தல் | ௩௮ |
| ப்ரேமாநுபவம் | ௪௦ |
| உரையுவந் தருளிய கருணைபா ராட்டல் | ௪௧ |
| வாழ்த்து | ௪௧ |
| செய்யுள் முதற்குறிப் பகராதி | ௪௨ |
| குறிப்புரை | ௪௬ |

முருகன் துணை

# முகவுரை

இறைவன் திருவருளால் தனு கரண புவன போகங்களைப் பெற்று வாழும் மக்கள் தாம் பிறவி பெற்ற பயன் அவ் விறைவன் திருவருட் கிலக்காகி முக்தியின்பத்தைப் பெறுதலே யென்பது எச் சமயத்தோர்க்கும் முடிந்த முடிபாகிய உண்மை. இந்த லக்ஷ்யத்தைக் குறிக்கொண்டு காலதேச வர்த்தமானங்களுக் கேற்ற ஸாதனங்களைப் பற்றித் தாமே உய்தலன்றிப் பிற உயிர்களையும் உய்விக்கத் திருவுள்ளங் கொள்ளும் மகான்கள் நம் நாட்டில் அவ்வப்போது திருவவதாரம் செய்கின்றார்கள். இறைவனே அவ்வக் குருவின் திருவுருவத்தோடு எழுந்தருள்கின்றா னென்று கருதுதல் ஆன்றோர் மரபு.

> "அருபரத் தொருவ னவனியில் வந்து
> குருபர னாகி யருளிய பெருமையை"

என்று மணிவாசகப் பெருமான் கூறுதல் காண்க.

இங்ஙனம் அவதரிக்கும் மகான்களின் கடாக்ஷ வீக்ஷண்யத்தால் பல கோடி உயிர்கள் மீட்டிங்கு வாரா விழுப்பதவி பெறுகின்றன. அத்துவித மார்க்கத்தின்படி இப்பிறவியிலே முத்தி பெறுவாரு முளர்; "இத்தேகமொடு காண்பனோ" என்று தாயுமானார் வேட்கை பூண்டனர்; அவ் வேட்கை நிரம்பப் பெற்ற ஜீவன்முக்தர்கள் தம் முடைய நிரதிசயானந்தாநுபவத்தை முற்றவும் வெளியிட

இயலாவிடினும், ஆனந்தாதிசயத்தால் சில சில வகையாக ஒருவாறு புலப்படுத்தியுள்ளார்கள். ஏனைய ஜீவர்களும் தாம் பெற்ற இன்பத்தைப் பெறவேண்டுமென்னும் கருணைத் திறத்தால் அரிய உபதேச நூல்களையும் அநுபவ நூல்களையும் வெளியிடுகின்றனர்; நூல்களை வெளியிடுகின்றனர் என்று கூறுதல்கூடப் பிழை; அவர்களுடைய பரமானந்த வெறியில் வெளிப்படும் செய்யுட்களின் தொகுதிகளே சிறந்த நூல்களாக உலகில் என்றும் புலராப் பசுமையுடன் நின்று நிலவுகின்றன. இன்று நம் தமிழ் நாட்டில் உள்ள வேதாந்த சித்தாந்த நூல்கள் அத்தகைய பெரியோர்களின் கருணையையும் அநுபவத்தையும் விளக்கிக்கொண்டு நிற்கும் அடையாளங்களே யாகும். இவ்வடையாள மலர் மாலைத் தொகுதியிலே இந்நூலும் ஒரு வாடா மணமுறு நறுந்தமிழ் மாலையாகும்.

ஸ்ரீ ரமண பகவானைப்பற்றிக் கூறுதல் சூரியனைப்பற்றி உலகோர்க்குக் கூறும் பேதைமைச் செயலோ டொக்கும். மேனாட்டினரும் கீழைத்திசையிலே உதயமாகியுள்ள இந்த ஞான சூரியனை எதிர்நோக்கி நிற்கின்றார்கள் என்பதை உணரும்போது, இத்தகைய ஞானஜோதி ஒளி வீசும் நாட்டிலே, இந்த ஜோதியினால் அஞ்ஞானாந்தகாரம் புகல் காணாது பொன்றக் கெடும் காலத்திலே பிறக்கும் பேறுடையோ மென்ற ஏமாப்பு உண்டாகின்றது. இந்த வாடாமாலையைத் தொடுத்த பெரியாரோடு சேர்ந்து நாமும், "வாழ்க ரமணமகான்!" என்று ஏழேழு லோகமும் கேட்கும்படி ஆனந்தகோஷம் செய்யவேண்டும் என்ற ஆவல் வீறிடுகின்றது.

இந்நூலின் ஆசிரியராகிய ஸ்ரீ முகவைக் கண்ண முருகனார் ஒரு ஜீவன் முக்தர். அவரை இந்த வகையிலே சொல்லு

தற்குக்கூடச் சிறியேனுடைய தகுதி போதாது. ஸ்ரீ ரமண பகவானது திருவருள் பெறவேண்டும் என்று அலந்து நின்று ரமணதாகம் மேலிட்டு ரமண பகவானாகிய நன்னீர்ப் பெருங்கடலிற் சார்ந்திநீருண்டு அக்கடலிலே மூழ்கித் தன்னை இழந்த இப் பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றைத் தனியே எழுதவேண்டுவதே இல்லை; இந்த ரமண தேவ மாலையிலே பகவானது புகழ் முருகனாரது வாழ்க்கை அநுபவமாகிய நாரிலே தொடுக்கப்பெற்றுள்ளது. இவர் பேத நிலையிலிருந்து பேதாபேத நிலையிற் புக்கு அதையுந் தாண்டி, 'தன்னையலால் வேறொன்றுங் காணமல்' 'எங்கெழி லென் ஞாயி றெமக்கு' என்று இறுமாந்திருக்கும் அபேத நிலையை யடைந்த வரலாற்றை இந்த ரமணதேவ மாலையே சொல்லுகின்றது.

இந்த நூல் ஒரே சமயத்தில் தொடர்ச்சியாகப் பாடப் பெற்றதன்று; சில சில செய்யுட்கள் சில சில சமயங்களிலே பாடப்பெற்றன. ஆதலின், அவ்வக் காலத்தில் இருந்த பக்குவத்தின் சித்திரமாக அவ்வப் பகுதிகள் விளங்குகின்றன.

முதலில் ரமணதேவனார் தாட்கு மாலை வனைய விநாயகரையும் கலைமகளையும் தனித்தனியே துதிக்கப் புகும் ஆசிரியர் ஒரு மலையின் அடிவாரத்தில், மலையின் உச்சி வேறு, தாம் வேறு, வணங்கப்படும் தெய்வம் வேறு என்ற மன நிலையில் நிற்கின்றார். அப்பால் தாம் அடையும் உச்சசிகரமாகிய ரமண தேவனைச் சிவஸ்வரூபமாகவும் சுப்பிரமணிய ஸ்வரூபமாகவும் காண்கின்றார். மலையின்மேல் ஏறும்போது தமக்கு முன்னுள்ள சாரலையும் மலையின் உச்சியையும் மலையின் வெவ்வேறு பகுதியாகப் பார்த்தாலும் அவை மலையினும் வேறல்ல என்ற ஞாபகம் இந்தக் காட்சியின் அடித்தளத்திலே உண்டாகின்றது. மலையின் உச்சியை அடைந்த

பொழுது மலைச்சாரலெல்லாம் மறந்துவிடுகின்றன. மலையின் பிற பகுதிகள் ஞாபகத்துக்கு வருவதில்லை. உச்சி ஒன்றுதான் காணும் காட்சியாக உள்ளது; அந்த நிலையில் ரமணபக வானைக் குருஸ்வரூபமாகப் பாராட்டும் அநுபவம் எழு கின்றது. அதுவும் முற்ற முற்ற உச்சியிலே தன்னைக் கிடத்தியபொழுது அவ்வுச்சியையும் மறந்து எங்கும் பரந்த வெளியில் எல்லாம் ஒன்றாக எல்லையற்றதாகக் காண்கின்ற நிலையில் தோன்றிய சில அரிய செய்யுட்கள் உள்ளன. அந்த அநுபவத்திலே எழுந்த அமுதத்துளிகளே,

**"என்னை விழுங்கி யொளிரும் வெளி"** (180)

என்பது போன்ற பகுதிகள். அந்தக் கரைகடந்த மோன முடிவிலே ரமண பகவானது உண்மையைக் காண்கின்றார் இப் பெரியார்; அவனது மோனவழகை வியக்கின்றார்; மௌனோபதேசத்தை ஆனந்த வெறியிலே நினைக்கின்றார்.

இந்த நிலை வருவதற்கு இவ்வாசிரியர் பட்ட பாட்டை யும், இந்த நிலை வரவேண்டும் வரவேண்டுமென்று ஏங்கித் துடித்த வருத்தத்தையும் இந்த மாலையின் முற்பகுதியா லுணரலாம்.

தம்முடைய அன்னையார்பால் இயல்பாக அன்புடைய இவ் வாசிரியர் ஆண்டான் சென்ற நெறியே தாமும் செல் கின்றார். பகவான் தம்முடைய அன்னையாருக்கு அருள் செய்தமையை நினைந்து இவரும் தம் அன்னையாருக்கு அருள் செய்வித்தலை விரும்பிப் பகவானிடம் முறையிடு கின்றார்.

**"என்னன்னை வல்வினையா லெய்துங் கடும்பிறவி**
**உன்னன்னை போல வொழி"** (27)

என்பதில் இக்கருத்தைக் காணலாம்.

தம்முடைய அன்னையாரின் அன்புக்குரிய கைம்மாறு, அவ் வம்மையாரை ரமணபகவானிடத்தில் ஒப்படைத்தலே யென்ற துணிவுடையவர். இவர்;

> **"அன்னையே யாவாட் கடியேன் செயத்தக்க**
> **துன்னையே தான்வேண்டி யுய்வித்தல்"** (43)

என்பது காண்க.

தம் அன்னையார் பிணியுற்றிருந்தபோதும் மரணத் தறுவாயிலும் அவரை ஆட்கொள்ளவேண்டுமென்று முறை யிட்ட செய்யுட்கள் பல இதில் உள்ளன. "தெனுது திசைத் தலைமை பூண்டோன் சினங்கொண்டு, என் அன்னையாரின் மேற் பாசம் ஏவாது பாதுகாக்க வேண்டும்" என்று இவர் வேண்டுகின்றார். அன்னையார் பகவான் திருவடி நீழலிற் கலந்த பின்பு, அவ் வம்மையார் நற்பதவி யெய்தின ரென்ப தை இவர் நன்கு அறிவர். அதற்குரிய தகுதி அவ்வம்மையா ருக்கு உண்டென்பதை,

> **"நின்னைப் பணிந்த நிறைதவத்தாள்"** (38)

என்பதனால் உணர்கின்றோம். தாம் வேண்டிக்கொண்டபடி பகவான் திருவருள் செய்ததுண்டோ வென்பார்,

> **"எமனை மிகவிலக்கி யின்னருள்செய் தாயோ"** (42)

என்று மீண்டும் இவர் வினவுகின்றார். இவ்வினு ஐயத்தால் எழுந்ததன்று; பகவானைப் பணிந்த நிறை தவத்தாலும், மரணத்தறுவாயில் அருணைத்தலத்தை அகத்தாற் கருதியமை யாலும் அன்னையார் யமபாசத்தை விலக்கிப் பேரருள் பெற்றன ரென்ற தம் நம்பிக்கையைப் பின்னும் உறுதி செய்துகொள்ளவே இங்ஙனம் வினவுகின்றார்.

தம் அன்னையாரைக் கரையேற்றுவித்த இப்பெரியார் தாமும் குடும்பக் கொடுநெறிநின்று விடுதலைபெற விரும்

பினார். அப்படியே விடுதலை பெற்றனர். பகவானிடத்திலே இவர் விண்ணப்பித்துக் கொண்ட வேட்கை யவ்வளவும் நிறையப்பெற்றார்.

"நின்பணி செய்
தியானவ் வுபசாந்தி யெய்தி யினிதிருத்தற்
கான வுபாய மறை" (85)

என்று வேண்டிய இவர் அந்த உபசாந்தி நிலையைப் பெற்ற அநுபவத்தைப் படர்க்கையிலே வைத்து,

"கற்றோர்க ளெல்லாங் கரங்குவிக்கும் வேங்கடவன்
உற்றோர்கட் கெல்லா முதவுவான் - முற்றத்
தவந்தா னுளநற்றினர்க்குஞ் சார்தற் கரிதாய்
நிவந்தவுப சாந்த நிலை" (131)

என்று பாடுகின்றார்.

"மரீயச் செருக்கிரண்டின் மாயா வலிபோன்றித்
தேயத் திருவருள் செய்" (70)

என்று இவர் முறையிட்ட முறையீடு பலித்த தென்பதை,

"தேய்ப்பரிய மாயச் செருக்கிரண்டுந் தேய்ந்தனவே
வாய்ப்பரிய சாந்தநிலை வாய்த்ததுவே - சாய்ப்பரிய
வெம்மாயை சாய்த்த விறல்வேங் கடரமணப்
பெம்மானை யானடைந்த பின்" (199)

என்னும் செய்யுள் விளக்குகின்றது.

"நன்னிலையாஞ் சித்த நடுநிலையைச் சாய்க்கின்ற
இந்நிலைநின் றென்னைநின் னின்னருளால் - இன்னே
விடுவிட்பா யுள்ளத்தை" (88)

என்ற இவரது வேண்டுகோளுக்குமேற் பன்மடங்கு அதிகமான பயன் கிடைத்த தென்பதை, படர்க்கையிலே அமைத்துக் கூறும்,

"ரமண
அழகனைக் கண்ட வடியவ நுள்ளம்
அழியா திருத்த லரிது" (166)

என்னும் செய்யுட் கருத்து புலப்படுத்துகின்றது. பகைவனிடத்தினின்று விடுதலை வேண்டிய ஒருவனுக்குப் பகைவனே அழிந்தொழியும் நிலை நேர்ந்தால் அது பெறுதற்கரிய பெரும்பேறன்றோ?

'என்னிலையி னிற்த மியல்பு' (91)

வேண்டுமென்று தம் நிலையினின்ற தயாளராகிய பகவானிடத்தே யாசித்த இவர்,

"உன்னை யடைந்த வுறுதவத்தா லுண்மையாய்
என்னை யடைந்துவிட்டே னின்று" (101)

என்று ஐயமின்றி 'உண்மையாக' அந்நிலையை அடைந்து விட்டமையைக் கூறுகின்றார்.

ரமணபகவானது தானசிலத்தையும், தயையையும், தனிப் பெருமையையும் இவ்வாசிரியர் அநுபவத்தா லறிந்தபடி உணர்த்தும் பகுதிகள் மனமுருக்குந் தகையன. எம்மதமும் சம்மதமாக உறையும் அப்பெருமானது மௌனோபதேசம் உலகமெங்கணும் ரமணாச்சிரம மாக்குகின்றது என்ற உண்மையை வெளியிடும் செய்யுட்கள் உணர்ந்து சிந்தித்து இன்புறத் தக்கவை. பகவானை ஓரெல்லையிலே சிறைப்படுத்தி ஓரதிகாரத்தைக் கொடுத்து வரையறை செய்வதை இவர் விரும்பவில்லை. 'ஆன்மாவிலே அமனஸ்க நிட்டை பெறுவித்தலே ரமண சந்நிதானத்தின் பரமரகசியம்' என்று இவர் கோஷிக்கின்றார். பகவான் நிக்கிரகாநுக்கிரக சக்தி யுடையவரேனும் அநுக்கிரக சக்தி மாத்திரமே என்றும் காணப்படுமென்றும், பக்குவிகளுக்கே யன்றி அபக்குவிகளுக்கும் பகவானது அருளாறு பாய்வதில்

தடையொன்றுமில்லை யென்றும் இவ்வாசிரியர் பகவானது தனிப்பெருமையை யாவரும் அறியச் சொல்லுகின்றார்.

இவர் திருவள்ளுவரிடத்தும் திருக்குறளிடத்தும் நன் மதிப்புடையவர். "ஒழுக்கத்து நீத்தா" ருள் ஒருவராகிய இப் பெரியார் தம்மை ஆட்கொண்ட ரமண பகவானது மெய்ஞ்ஞான லஹரியாகிய அழகே அழகென்று கூறுபவர் "உள்ளமிகு மாதி பகவ னுவந்தளித்த வள்ளுவர்வாய் வண்மையே வண்மைபோல்" என்று அதற்கு வள்ளுவர் வாய்மொழி வண்மையை உவமையாக்குகின்றார்.

"மகிதலத்தில் வந்தருளும் வான்கருணைக் கம்மா
அகிலமுமே யாற்ற லரிது" (109)

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகையெளி துய்த்துணர வைத்து" (114)

"எண்ணமெழும் போதே யினிதாகக் கொல்கென்ற
அண்ணல் ரமண னவன்" (139)

"கலைஞரெலாந் தேர்வேங் கடரமணன் றோற்றம்
மலையினுமே மாணப் பெரிது" (169)

என்பன போன்ற இடங்களில் வள்ளுவர் வாய்மொழி மணப் பதைக் காண்க.

ரமணபகவானது அருளமுத முண்டு தேக்கிய முருகனு ராகிய வண்டு முரலும் இந்த ஞான ரீங்காரத்தைத் தமிழ்ச் செவியுடையார் கேட்டுப் பயன் பெறுவார்களாக.

இந்த அரும்பெறன் மாலையை உலகுக்கு வெளிப்படுத் திய பெருமை ஸ்ரீ ரமணபாதானந்த சுவாமிகளைச் சார்ந்தது. சிவபெருமானது புகழாகிய தேவாரத்தைச் செந்நெறிச் செல்வர்களாகிய மூவரும் திருவாய்மலர்ந்ததுபோல, ஸ்ரீ ரமணபகவானது புகழாகிய இம் மாலையை முருகனார் திரு வாய்மலர்ந்தார். அத்தேவாரத்தை நம்பியாண்டார் நம்பிகள்

தமிழுலகுக்கு வெளிப்படுத்தியதுபோல ஸ்ரீ ரமணபாதானந்தர் இம்மாலையை வெளிப்படுத்தினார். ஸ்ரீ ரமணபாதானந்தருக்கு முருகனார்பால் உள்ள பக்தி, ஞானசம்பந்தரிடத்து நம்பியாண்டார்நம்பிகளுக் குள்ள பக்தியிலும், அப்பர் ஸ்வாமிகளிடத்து அப்பூதியடிகளுக் குள்ள பக்தியிலும் சிறிதும் குறைவுடையதன்று. ரமண மணம் வீசும் இப் பாமாலை வாழ்க!

வாழி ரமணன் மலரடிகள் அன்னவனைச்
சூழு முருகனார் தூயவியல் - வாழியவே
வாடாத ஸ்ரீ ரமண மாதேவ மாலையிது
நீடூழி வாழ்க நிலத்து.

இங்ஙனம்,
கி. வா. ஜகந்நாதன்

சிவமயம்

# சிறப்புப் பாயிரம்

## விழுப்புரம்
## ஸ்ரீ நடனானந்தர் இயற்றியது

---

[நேரிசை வெண்பா]

1. மூர்த்திகளு மூல முதற்பொருளு மூதறிவால்
ஓர்த்துணரு மோன வுயர்பொருளும்—சீர்த்திபெறக்
கொண்ட ரமண குருபதமு மொன்றேயாக்
கண்டிருந்தான் கண்ணமுருகன்.

2. வீடு பெறலாம் பிறவா நலம்பெறலாம்
ஈடுயர்வில் லாவின்ப மெய்தலாம்—வீடருளும்
தாதாவின் றாட்கன்பாற் சாத்தியதாஞ் சீரமண
மாதேவ மாலையணி வார்.

ராவ்பஹதூர்

ஸ்ரீ வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், எம். ஏ.


*(Retired Personal Assistant to the Inspector-General of Registration)*

இயற்றியது

---

[கட்டளைக் கலித்துறை]

எம்மூன்று கோலன்ன நண்பூ ரினியர் முருகமுனி
அம்மூன் றெயிலுங் கடிந்த வரனும் ரமணரன்று
தம்மூன்று குற்றங் கடிந்து தமையாண்ட தன்மையெல்லாம்
மும்மூன் றிருபத்து மூன்றுவெண் பாவின் மொழிந்தனரே.



ஸ்ரீரமணபகவான்

உ

சிவமயம்

ஸ்ரீ

# மாலைமாற்று

மாலை யளித்தரு ணாசல ரமணவென்
மாலை யணிந்தரு ளருணாசலா.

—ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை

உ

சிவமயம்

# ஸ்ரீ ரமணதேவ மாலை

## மங்கலம்

### விநாயக வணக்கம்

[நேரிசை வெண்பா]

1. திருவேங் கடரமண தேவனார் தாட்கே
மருவோங்கு மாலை வனையத்—தருவான்காண்
மானை முருகற்கு மாலை யணிவித்த
ஆனை முகத்தா னருள்.

### கலைமகள் வணக்கம்

2. வெண்டா மரைத்தவிசில் வீற்றிருக்கு மெல்லியலே
பண்டார் மறைப்பொருளைப் பாலிக்கக்—கண்டார்
கடுவினைகள் சுட்டுக் கரியாக்குங் கண்ணன்
அடிநிதமும் போற்ற வருள்.

—:o:—

## சிவஸ்வரூபமாகத் துதித்தல்

3. சிவனே ரமணமா தேவாநீ துய்க்கும்
உவமையிலா வானந்த வோகை—உவகை
தினைத்துணையு மின்றித் தெருமரூஉ மிந்த
அனைத்துலகுந் துய்க்க வருள். க

4. காந்தி யெழூஉங் கசடனே ஞானும்
மாந்த ருருவாய்ந்த மாதேவா—சாந்தியே
கூடலைமேற் கொண்டெழுந்த கொள்கையே ஞாதலாற்
ருடலைமேற் சூட்ட றகும். உ

5. சங்கரனே நீபாச சமைந்திருக்கச் சண்முகன்போற்
சங்கரனைத் தந்தையெனச் சாற்றியதென்—சங்கையறச்
சொல்லி யருள்வாய் தொழுதெழுவா ரங்கையின்
நெல்லிக் கனிரமண னே. ங

6. தடவருவி பாயுந் தடவருணைச் சாரல்
வடவரையின் மேலே வளரும்—வடவால
நீழலுளான் ஞான நெருப்புமய மாநிமிர்ந்த
தாழ்சடையோன் சித்தவுருச் சார்ந்து. ச

7. வடவரையின் மேலே வளரால நீழல்
இடமான சித்தரம ணேசன—தடப்பெரும்பே
ரன்பாலே சேர்ந்திருப்பா னண்ணு மலையடிவாய்த்
தென்பாலே யாச்சிரமத் தேத்து. ரு

8. செருவினையுஞ் சித்தஞ் சிவன்பாலே யாக்கி
இருவினையும் வென்றிட்டே னின்ப—உருவாம்
திருவருணைச் சார்பிற் சிவமயமாச் சேரும்
குருவருளை முன்னிட்டுக் கொண்டு. ௬

9. உலகெலா மோடி யுழலாதே சிந்தைக்
கலகமா மாயையறக் காண்மின்—இலகும்
உருத்தக்க சோணை யுறவரையின் ஞானத்
திருத்தக்க தெய்வச் சிவம். ௭

——:o:——

## சுப்பிரமணியஸ்வரூபமாகத் துதித்தல்

### முன்னிலைப் பரவல்

10. ஆரக் கொடுப்பா யருணை சலப்புனிதச்
சார னுறைரமண சற்குருவே—கீரற்குப்
பண்ணார்ந்த வாற்றுப் படைகேட் டருள்செய்த
அண்ண லருட்பே ரமுது. ௧

11. தன்மமே தோர்பொருளுந் தான்செய்ய மாட்டாதேன்
வன்மமே செய்யவெனின் மாட்டுவேன்—கன்மமே
ஈட்டுங் கடுவினையே னென்றாலுங் கந்தப்பா
காட்டுவா யுன்றன் கழல். ௨

12. இருவின் சமயமலா லேனைச் சமயத்
திரனென் றாங் தேர்ந்தறியா தேற்குப்—பரன்மெய்
சமரசசன் மார்க்க சமயநிலை காட்டும்
குமரகுரு நாதா நீ கூறு. ௩

13. ஈங்கே யிருந்திங் கிவையனைத்துங் காணும்யான்
யாங்கு மிருப்பேனே யாமாயின்—ஆங்காங்
கவையனைத்துங் காண்ட லவசியமே யன்றோ
சிவகுமர காரணமென் செப்பு.

14. அண்ணா மலைரமணா வாகாப் பெருமயல்கொண்
டெண்ணா தனவெண்ணி யேங்குவாள்—பெண்ணாவாள்
சிந்தைப் பெருமயலைத் தீர்க்கத் திருவுளமோ
கந்தக் கடம்பா கழறு. ௫

15. பன்னிரண்டு வெங்கதிரும் பாண்டிரம ணாவுனக்குப்
பன்னிரண்டு கண்ணாப் பவித்தவைமுன்—மன்னிருண்ட
என்னிரண்டு வல்வினையு மென்னுடைநா லேழ்பிறப்பும்
துன்னெரிமுற் றோன்றியவைத் தூறு. ௬

[பஃறொடை வெண்பா]

16. ஆதரத்தோ டென்னை யழைத்தரம ணானந்த
மாதவத்தோய் சூர்தடிந்த மாவலத்தோய்—பாதலத்தே
சாம்பிக் கிடந்த சகரர்மேற் பாய்ந்தொழுகி
ஓம்பிக் கதிபெறவே யுய்வித்த—தீம்புனித
நீர்போல்வா யென்று நினைந்தடைந்தே னேமாறப்
பேரோங்கு சோதிப் பெரும்பிழம்பாய்ப்—பார்பொறுத்த
அண்ணா மலைபோ லடியேன் பவப்பிணியைக்
கண்ணாலே சுட்டெரித்தாய் காண். ௭

[நேரிசை வெண்பா]

17. பாண்டிப் பதிவாய்ப் பரங்கருணை வெள்ளமே
ஈண்டிக் கழுமரத்தி லேற்றியதென்—மூண்டெழுந்தார்
எல்லாரும் போல் விரங்காம லாருகதப்
பல்லா யிரவோரைப் பண்டு. ௮

18. செவ்வேளே நீயாகச் செப்புவரேற் சங்கரனை
அவ்வேளை யானுன்னை யாய்ந்தவன்—எவ்வமறச்
சொல்லி யருள்வாய் தொழுதெழுவா ரங்கையின்
நெல்லிக் கனிரமண னே. கூ

19. உன்னிலே தோன்றி யொடுங்கும் பலவுருள்ளிட்
டுன்னை யொராரனோர் சிலவரா—உன்னியே
முன்னை மதியுழந்த மோச மடிநிலமாம்
தன்னை யறியாத் தவறு. கo

(அன்னையின் பிணியை யகற்றிட வேண்டல்)

20. கொடியேனை யாண்ட குருநாதா நின்சே
வடியேனை யீன்றெடுத்த வன்னை—படிமேல்
உழந்ததுய ரெல்லா மொருகணத்திற் போக
வழங்குவாய் நல்ல வரம். உக

21. அன்னை பிணியா லழுங்கிப் படுமவத்தை
உன்னுதோ றுள்ள முடையுமே—மன்னவா
ஆங்கால நோக்கிநீ யட்டித்தல் செய்யாதே
நீங்காத நோய்விரைவி னீக்கு. உ

22. பொல்லாக் கொடும்பிணிகள் போக்கென்ற லப்பிணிகள்
எல்லாநின் மெய்க்கேயே லென்றலெனின்—நல்ல
தனைப்போல்வா ரில்லாத் தயாநிதியே யுண்டோ
எனைப்போலும் பாவி யியம்பு. ௩

[இன்னிசை வெண்பா]

23. ஆன்றோ ரிறைஞ்சுரம ணானந்தா வாசையால்
ஈன்றாள் படுபிணிநோ யெல்லாமென் மீதேவி
அன்னாளை யந்த வரும்பிணிவாய் நின்றமே
இன்னேமீட் பிக்க வினிது. ௪

[நேரிசை வெண்பா]

24. சேய்க்கன் றருள்செய்த சேயேநின் சேயருமைத்
தாய்க்கின் றருள்செய்யத் தாமதமென் — தாய்க்கின்
றுடற்பிணியே யன்றி யுயிர்ப்பிணியும் போக்கித்
தடப்பெரும்பே ரானந்தந் தா. ௫

25. மாயோன் மகிழு மருகா குருரமணா
சேயே யெனதுகுல தெய்வமே — தாயாம்
அபலைக் குறுநோ யகற்றாயே லுன்றன்
அபயக் கொடியை யகற்று. ௬

26. தஞ்ச மடைந்த தமியேனை வாட்டிவரும்
நெஞ்சப் பெருங்கவலை நீங்கநின் — கஞ்சமலர்த்
தாளே சரணடைந்த தாயின் மனக்கவல்செவ்
வேளே யிறுத்து விடு. ௭

27. மனாதிகளுக் கெட்டாத மாதேவன் சேயே
எனதியல்பால் யானென் றிசைப்பேன் — உனதியல்பால்
என்னன்னை வல்வினையா லெய்துங் கடும்பிறவி
உன்னன்னை போல வொழி. ௮

28. ஆவலா யுற்ற வடியார் படுந்துயர
மாவல் லிருட்பிழம்பு மாயக்கூடம்—சேவலோய்
என்னைத் தெளித்தரம ணேசா வெனதருமை
அன்னைக் களித்த லறன். ௯

29. காதலா லெற்குநீ காட்டினாய் மெய்ஞ்ஞானம்
ஆதலா லென்னருமை யன்னைக்கும்—சூதலா
உண்மை யுணர்ச்சி யுதவிக் குருநாதா
தண்ணளிநீ செய்கை தகும். ௧௦

(அன்னைக் கருள்செய் தாட்கோள வேண்டல்)

30. என்பெல்லாம் பற்றி யெரிகிறதே யென்றன்மாட்
டன்பில்லார் போல வலறுவாள்—இன்பமுற
நின்னெரியா லன்னை நீறுக்கு முன்பேநின்
பொன்னருண்மா மாரி பொழி. ௧

31. என்னை மறந்தாளோ வென்னன்னை யுள்ளத்தால்
உன்னை நினைந்தாளோ வோதுவாய்—உன்னை
நினையாளே லின்னே நினைப்பித்துக் கொள்வாய்
எனையாள வந்தவிறை யே. ௨

32. தெறுது திசைத்தலைமை பூண்டோன் சினங்கொண்
டெறுதனையின் மேற்பாச மேவா—துறுதுமணி
வேலா லவனை விலக்கி யருள்செய்தல்
காலகா லாவுன் கடன். ௩

33. தன்கையிற் பிள்ளையாத் தானென்னைத் தாங்கினளே
உன்கையிற் பிள்ளையா வொப்புவித்தேன்—என்கையாற்
சேயேநீ யென்றாலுஞ் சீர்வேங் கடவாநீ
தாயேயாத் தாங்கல் கடன். ௪

(அனைதிரு வடியுற வவணிலை விறுதல்)

34\. பேர்ந்தாளோ பிள்ளைப் பெரும்பாச முன்னருளோ
ஓர்ந்தாளோ பொன்னடியை யுற்றாளோ—சேர்ந்தாளோ
சீரருணை வாழ்ரமண தேசிகா நின்னுருவாம்
பேரருள்சேர் சோதிப் பிழம்பு. க

35\. பந்தமெலா நீங்கிப் பரமபதஞ் சேர்ந்தாளோ
அந்தமிலா முத்தி யடைந்தாளோ—புந்தியமை
வுற்றே நிறைந்தாளோ வுண்மையறி வானந்தம்
நற்றாய்பெற் றாளோ நவில். உ

36\. உன்னைப் பரம்பொருளா வோர்ந்தாளோ நின்னருளாற்
றன்னைத்தா னோர்ந்தே தரித்தாளோ—என்னன்னை
தேசையெலா நல்குந் திருவேங் கடரமணா
ஆசையொரு மூன்றா மவிந்து. ங

37\. தானந்த மில்லாத் தயாபரா நின்னருளால்
ஆனந்த வீட்டி லமர்ந்தாளோ—தானம்
தவமிரண்டுஞ் செய்துவப்பார் தாமாதல் போலச்
சிவமயமா வானாளோ செப்பு. ச

38\. நின்னைப் பணிந்த நிறைதவத்தா ளாகையால்
என்னை மகவாக வீன்றெடுத்த—அன்னை
எளியவளே யானாலு மின்பவறி வுண்மை
வெளியுருவா மேவினளோ விள்ளு. ரு

39\. என்பாகம் பற்றி யெரிந்த வெரிவொழிய
உன்பாதத் தண்ணிழல்வந் துற்றாளோ—அன்பாக
நீபமலர் மாலை நெடுந்தோளில் வேய்ந்தோனே
தாபமொரு மூன்றுந் தணிந்து. சா

40. நீறாக வெந்து நெடுங்காட்டிற் கண்டதே
பேறாக வென்னைத்தான் பெற்றெடுத்தாள் — வீறாகும்
இன்னலெல்லாந் தீர்ந்துன் னிணையடிக்கீழ்ச் சேர்ந்ததோ
நன்னரவ ளான்மா நயந்து. எ

41. மரணத் தறுவாய் மதிதடுமா றாமே
அருணைத் தலத்தை யகத்தூற் — கருதித்
திருப்பெருக நன்குசேர்ந் தாளோநின் மேனி
அருட்பெருஞ் சோதி யகத்து. அ

42. வேலா யுதாசுத்த வீரா நினைநினைக்க
ஏலா தெனுதன்னை யிற்றநாள் — வேலால்
எமனை மிகவிலக்கி யின்னருள்செய் தாயோ
ரமணகுரு நாதா வியம்பு. கூ

43. அன்னையே யாளாட் கடியேன் செயத்தக்க
துன்னையே தான்வேண்டி யுய்வித்தல் — ஒன்றையலால்
வானென்ன நாடாது வான்கருணை செய்தானுக்
கியானென்ன செய்வே னினி. க0

## படர்க்கைப் பரவல்

### (இயல்புரைத்தல்)

44. அண்ணா மலையாளி யாண்டி ரமணகுரு
அண்ணலா ரென்ன வறியலுற்றிற் — றிண்ணமாய்
அங்கிங் கெனும லகில்லும்மே தானாகி
எங்குங் கலந்த விறை. க

45. அப்பாவைத் தேடி யருணா சலமடைந்து
தப்பாத சோதித் தனிச்சுடரைத்—துப்பார்
சுழிமுனையிற் சந்தித்துச் சும்மா விருப்போன்
சுழியல்வாய்த் தோன்றிய தூண். ௨

46. அப்பன் பணித்தபடி யத்துவித மார்க்கத்தைச்
செப்பத் திருவுளமாய்ச் சேர்ந்திருப்பான்—தப்பா
தமரர் வரங்கிடக்கு மண்ணா மலையிற்
குமரன் குருவடிவங் கொண்டு. ௩

47. சச்சித்தே தானாகித் தானேயச் சச்சித்தாய்
அச்சித்துக் கன்னியமே காணாத—உச்சத்தான்
பற்றினார் பற்றறுக்கும் பாவனமாம் பார்வையான்
வெற்றிவேற் கைரமண வேள். ௪

48. விண்ணோரு மெய்தா விழுப்பதவி தற்சேர்ந்த
மண்ணோரு மெய்த வழங்குவான்—நண்ணாவாய்க்
கால்வாங்கி யோடவென் காமாதி கட்டழித்த
வேல்வேங் கடரமண வேள். ௫

(அருளிய வண்ண முரைத்தல்)

49. சித்தசுத்தி யில்லாச் சிறியேற்குஞ் சித்தமகிழ்ந்
தத்துவித வுண்மை யறிவித்தான்—சற்றும்
அபாத்திரமென் றொன்றை யறியாத ஞான
உபாத்திரம ணார்ந்த வேள். ௧

50. துளக்கமே யில்லாத் துரியநிலை காணக்
களக்க மறவிளங்குங் காட்சி—அளித்தான்
மிகவே விபுதரெலா மெச்சும் ரமண
குகவே ளுருவாங் குரு. ௨

51. சிமயந் தொறுநின்ற செவ்வேள் பரந்தோர்
சமயந் தொறுநின்ற சாமி—இமியும்
தனக்குவமை யில்லாத் தனிரமணன் பேயேன்
மனக்கவலை மாற்றினான் வந்து. ௩

52. பொல்லா னிவனென்னப் புந்தியா லோர்ந்திருந்தும்
புல்லாம லென்னைப் புறக்கணித்துத்—தள்ளாமே
சாந்தி பதமளித்துச் சார்ந்திருக்க வாய்மலர்ந்தான்
சேந்தரம ணானந்தச் சேய். ௪

53. தந்தை தளர்வொழிக்கத் தான்கருதித் தந்தைபுரி
ஐந்து தொழிலு மதிகரித்து—வந்து
மலைச்சிறையில் வைகுவான் வாள்வீசி யென்றன்
புலைச்சிறையைச் சேதித்தான் போந்து. ௫

(சிந்தையறுத்த திறம்பாராட்டல்)

[பஃறொடை வெண்பா]

54. சிந்தை சிவமாகச் செற்றோ னடியவர்தம்
புந்தியரண் சுட்டுப் பொடிசெய்வோன்—அந்தமிலா
விந்தைபல செய்யும் விறலோ னுமாபதியைத்
தந்தையெனப் பெற்றகுரு சாமிதான்—பந்தமுறு
வேதிகைப் பள்ளி யுவாத்தி வெகுண்டெழுந்து
தீதுகைக் கொண்ட சிறுருடலைக்—காதுகைபோற்
பள்ளத்தே பாயும் பசும்புனல்போற் பாவநதி
வெள்ளத்தே பாயும் வெறியனேன்—உள்ளத்தைக்
கண்ணெடுத்தபார்வையாற்கட்டழித்தான் காசினிமேல்
எண்ணெண்டுந்த பல்லோ ரெதிர். ௧

55. வேற்சேவகம்புரிந்து விண்ணோர்க் கரசளித்தோன்
காற்சேவகர்க்குக் கதியளிப்போன்—மாச்சகமேல்
ஆடவர்க் கெல்லாமே யாணியாத் தானிருந்தும்
தோடலர்பூங் கோதையணி தோகையர்போல்—ஏடலர்பூங்
கண்களிரு வேலாகக் கட்டழித்தா னென்னுடைய
திண்கொளொரு சிந்தை யரண். ௨

[நேரிசை வெண்பா]

56. உண்ணோட்டங் கூட்டு முபநிடதக் கேள்வியாற்
பண்ணோட்டையில்லாச் செவியேனைக்-கண்ணோட்டம்
என்னும்வே லோச்சி யிதயத்தைக் கட்டறுத்தான்
சென்னிமேற் றேவர்கொளுந் தேவு. ௩

57. வீரவடி வானவடி வேல்வேங் கடரமணன்
சூரபது மன்னெனத்துள் ளென்னுளத்தை—வீர
அயிலான கண்ணா லறவுமேற் கொண்டு
மயிலாக வூர்ந்தான் மகிழ்ந்து. ௪

## தலைவி கூற்று

### (மகளிரை ஆற்றுப்படுத்தல்)

58. தலையார் தலைபண்டத்த தங்கைமீ ரந்தத்
தலையார் தலையாலே தாழ்மின்—தலையாம்
தலைவர்க்கு மேலாந் தலையாகி நின்ற
தலைவனும் வேங்கடவன் றாள். ௧

59. பூக்கமழும் பூங்கா வனம்புகூஉம் பூவையரே
மூக்காலே சென்றா முரலுமினோ—ஊக்கமிகு
முண்டகனு மோந்தறியா மூர்த்திரம ணேசனது
புண்டரிகச் சேவடிப் போது. ௨

60. கண்ணகன்ற ஞாலத்திற் கண்படைத்த காரிகையீர்
கண்ணாலே சென்றாநீர் காண்மினோ—கண்ணாற்
பருகத் தெவிட்டாத பாண்டி ரமண
முருகனது செவ்வி முகம். ௩

61. மெய்யால் விளங்கியவாய் மென்மொழியீர் வாழ்த்துமினோ
மெய்யை விளக்கியவாய் வேங்கடவன்—பொய்யை
வெருவாச் சரணடைந்த மெய்யர்க்குப் பொய்யாப்
பொருளான் பொருள்சேர் புகழ். ௪

62. செல்வச் செவிபடைத்த செல்வச் சிறுமியர்காள்
செல்வச் செவியாலே கேண்மினோ—சொல்லளவும்
தீதறியா நன்றித் திருவேங் கடரமண
மூதறிஞன் கூறு மொழி. ௫

## (மடல்)

63. ஒவ்வாத மாமடலூ மூர்வேன்மன் னூரார்தாம்
கவ்வைதர நல்வேங் கடரமணச்—செவ்வேள்
ஒழுகு மழகை யுளப்படத்தி லேனும்
எழுதி விடுவே னெனின்.

## உறுதி யுரைத்தல்

64. பிறவிப் பெருங்கடல்வாய்ப் பேதுற்று வீழ்ந்தே
உறவிளைத்துக் கைசோர்ந் தொழிந்தேம்—மறையனைத்தும்
தேர்வேங் கடரமணச் செவ்வே ளடித்துணையே
ஊர்வேம் புணையா வுகைத்து. க

65. அடும்பாவ வல்வினையா லச்சமுறக் காலன்
கொடும்பாசம் வீசுங்காற் கொற்ற—நெடுவேற்
குமர னுரு வாகக் குவலயத்தே போந்த
ரமணனரு ளுண்டே யெமக்கு. உ

66. பாண்டிச் சுழியற் பதிநின் றருணைசேர்
ஆண்டி ரமண னருளிருக்க—வேண்டு துதி
செய்தே யழைத்தாலுஞ் சென்மக் கொடும்பிணிதான்
எய்துமோ வெங்கட் கினி. ௩

67. திருவேங் கடரமணச் செவ்வேள் வடிவாம்
குருநாதன் கூராது கூறும்—திருவருளால்
விண்டோமே பல்கவலை விள்ளாப்பே ரின்பமுறக்
கண்டோமே முத்திக் கரை. ௪

68. புத்தேளிர் போற்றும் புகழ்சால் குகரமண
சித்தேச் சுரன்றன் றிருவடியார்—பித்தாதிப்
பல்பிணிநோய் நீங்கிப் பரமசுகம் பெற்றாராய்
வல்வினைபோய் நீடுவாழ் வார். ௫

——:o:——

## குருஸ்வரூபமாகத் துதித்தல்

### முன்னிலைப் பரவல்

[பஃறொடை வெண்பா]

69. ஆண்டானே யென்றுன் னடிபணிகோ தந்தைகடம்
பூண்டானே யென்றுன்னைப் போற்றுகோ—வேண்டிவரு
நண்பனே யென்றுன்னை நாடுகோ நன்னயஞ்சேர்
கொண்கனே யென்றுன்னைக் கூடுகோ—பண்பால்

அமரரே போந்திறைஞ்சு மண்ணு மலைவாழ்
ரமணனே யானுன்னை யின்றி. க

[நேரிசை வெண்பா]

70. வேண்டியே கூவி வெறியேனை யாண்டமுனி
ஆண்டியே போந்த ளானே—ஈண்டியமா
மாயச் செருக்கிரண்டின் மாயா வலிபொன்றித்
தேயத் திருவருள் செய். உ

71. நினைத்துவரு மன்பர் நினைத்தவெலா நல்கித்
தினைத்துயருஞ் சேராமற் செய்வாய்—அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யெனக்களிப்பாய்
போக்குவர வில்லாப் பொருள். ங

72. நீயே கதியென்று நித்தமுனை யேநினைவேன்
தாயே யனையகுரு சாமிநீ—மாயா
விகார வுலகியல்வாய் வீழ்ந்து நரகிற்
புகாமை யருட்கண் புரி. ச

73. ஆசானே யுன்னை யடைந்தேன்பா லாதரத்திற்
பேசாப் பெரும்பதத்தைப் பேசினாய்—நேசமாய்க்
கூட்டுவதா லன்றிக் குருடனுக்கு நன்னெறியைக்
காட்டுவதா லென்னோ பயன். ரு

[பஃறொடை வெண்பா]

74. வந்துநிலைக் கேற்றபல மாண்குணங்கள் யாவுஞ்சேர்
அத்துவிதச் செம்பொருளா மண்ணலே—தத்துவத்தில்
யானேநீ யாக விசைந்திருந்தும் யானுன்னைத்
தானேவே றாகத் தரிசிப்ப—தேனோகாண்

மாயையே யென்ன வழங்குமவையே லம்மாயை
ஏயவா றெவ்வா றியம்பு. ௯

75. அண்ணா மலையடிவா யானந்தம் பொங்குமதி
வண்ணச் சிரம மகோததியே—மண்ணின்மேல்
என்னையலாற் சீடருனக் கெண்பதிற்றுக் கோடியுளர்
உன்னையலா லாசா னொருவனுமே—என்னளவில்
இல்லை யதனு லிறையு மறவாமை
வல்லையாய் நல்கலே மாண்பு. ௭

[நேரிசை வெண்பா]

76. அருவமே நீயா வமைந்திருக்க வற்ப
உருவமே யாவுனையா னோர்ந்து—வருவதெவன்
உள்ளத் துணர்வுருவா வுற்றுக் குருரமணா
தெள்ளத் தெளித்தருள்வாய் சேர்ந்து. ௮

77. பித்தம் பிடிப்பித்த பெம்மானே பேதையேன்
சித்தந் தெளியத் திருவுளமாய்—மத்தம்
தெளிமருந்து காட்டித் தெருமரலைத் தீர்ப்பாய்
இளிவரவு தீர வினிது. ௯

[பஃறொடை வெண்பா]

78. எம்மையினு நோய்ப்பால வெய்தாமை யாவரையும்
செம்மையிலே சேர்ப்பிக்குந் தேசிகா—இம்மை
உயலுறவே யுன்னை யுவந்தடைந்தேன் முன்போற்
செயலறவே யெய்தித் தியங்கி—மயலுழத்தல்
பார்ப்பார்கண் முன்னர்ப் பழியன்றோ வாதலாற்
காப்பாய்நீ யென்னைக் கடிது. ௧௦

[நேரிசை வெண்பா]

79. உய்தற் குளங்கொண் டுனையடைந்தோர் வாழ்வெய்தச்
செய்தற் கருந்தவஞ்செய் தேசிகா—பைதற்
கடும்பிறவி வீழ்ந்தேனைக் கைதூக்கி யாள்வாய்
இடும்பையெலாந் தீர வினிது. ௧௧

80. போக்குவர வில்லாப் பொருளா வடியேனை
ஆக்குமொரு மெய்ம்மையறி வானந்த—ஆக்கமே
நீக்கமறப் பேரின்ப நீத்தத்தி லேதிளைக்க
ஊக்குவா யென்னை யுவந்து. ௧௨

81. மாலயனுங் காணவே மாட்டாத வேங்கடவா
கோலமலர்த் தாள்கள் குறுகினேன்—மூலப்
பகுதிப் பிறவிப் படருழத்தல் சற்றும்
தகுதித் தரத்த தல. ௧௩

82. முன்னந் துயருழந்த மூடனே னிற்சார்ந்த
பின்னுந் துயருழத்தல் பெட்பாமோ—மன்னும்
சிதானந்த நாம திரவியமே ஞான
சதானந்த மாநிதியந் தா. ௧௪

83. மாரிபோ லெற்கு வழங்கினாய் மெய்ஞ்ஞானம்
பாரிபோ லத்தைப் பறித்தாயேல்—ஊரிலே
நீதியொரு சற்றிலையோ நேர்மைதவ றாரமண
வேதியா நீயே விளம்பு. ௧௫

84. குணங்குறிக ளில்லாத கோமளத்தைத் தோய்ந்தும்
இணங்குவதன் முன்போல வேங்கி—உணங்கி
அணங்குவகை யெய்தா தழிந்தொழிந்தே னந்தோ
பிணங்குவதை யெண்ணிப் பெரிது. ௧௬

85. அன்பே வடிவா வமர்ந்தரம ணானந்தா
வன்பே வடிவாய வல்வினையேன்—நின்பணிசெய்
தியானவ் வுபசாந்தி யெய்தி யினிதிருத்தற்
கான வுபாய மறை. கஎ

[பஃறொடை வெண்பா]

86. தன்மயமா யுற்ற சராசரங்கள் யாவுள்ளும்
சின்மயமா யுற்றுச் செறிந்தோயே—புன்மதியேன்
சிந்தைச் செயலைச் செறுத்தாயே யச்சிந்தை
எந்தச் செயற்கண்ணு மெத்துணையும்—முந்தைபோற்
செல்லாது சோம்பல்வாய்ச் சென்றதே யென்சொல்கேன்
எல்லா முணர்வாய்க் கினி. கஅ

87. எவ்வெப் பொருள்களுள வெவ்வெவ் வுருவுடைய
அவ்வப் பொருளிடையவ் வவ்வுருவாய்—எவ்வமறத்
தங்கி யொளிர்கின்ற சச்சிதா னந்தமயத்
தெங்க ளிறைவா ரமணேசா—சங்கையற
என்னை யுணர வியலாத வேழையேன்
என்னுருவா யென்னி லிருந்தியலும்—உன்னை
உணர்ந்தெய்த வொண்ணுமோ வொண்ணுமே யென்னை
உணர்ந்தெய்தி நின்ற வுழி. கக

[நேரிசை வெண்பா]

88. நன்னிலையாஞ் சித்த நடுநிலையைச் சாய்க்கின்ற
இந்நிலைநின் றென்னைநின் னின்னருளால்—இன்னே
விடுவிப்பா யுள்ளத்தை வேங்கடவா தீர
அடுவிப்பா யல்ல லற. உ0

89. காந்தி யழிந்து கருகுங் கடையேற்குச்
சாந்திநீர் வார்த்து விடாய்தணிப்பாய்—காந்தலிலாத்
தேசனே யோங்குந் திருவேங் கடவரம
ணேசனே யிப்போ தெனக்கு. உக

90. இடும்பையனைத் துக்கு மிருப்பிடமா வுற்ற
குடும்பக் கொடுநெறிநின் றென்னை—விடுவித்
திடையறா வாற்றாற் சொரூபத் தியானம்
நடைபெறா நிற்க நடத்து. உஉ

91. எந்நிலையுஞ் சற்று நிலையின் றெனவியம்பும்
இந்நிலையோர் சற்றுமினி யேலாதால்—மெய்ந்நிலையாம்
தன்னிலையி னின்ற தயாளரம ணாதருவாய்
என்னிலையி னிற்கு மியல்பு. உங

92. எறாஅ தகப்பே யிறைவரம ணேசா
உறாஅது சந்நிதிமுன் னுள்ள—தனையுமது
செத்தாலே போலச் செறிந்து சிறிதகல
மெத்தவெழு மென்ன வியப்பு. உச

93. கொன்றதுநான் கொன்றாய் கொடுஞ்சித் திரவதைசெய்
கின்றதுதா னென்றோ கிளத்துவாய்—உன்ற
னுழையடைந்த நாயேனை யோர்கணத்தின் ஞான
விழியா லழித்து விடாது. உரு

94. நஞ்சுணவுட் கொண்டேனு நாப்பிடுங்கி யிட்டேனும்
துஞ்சுதல்செய் துன்மேற் சுமத்துகோ—விஞ்சுபழி
தஞ்சமடைந் தேற்கருளத் தாமதித்த காரணத்தால்
விஞ்சுபுகழ் வேங்கடவா விள்ளு. உசா

[பஃறொடை வெண்பா]

95. அண்ணா மலைக்கீ ழணியாச் சிரமத்தின்
கண்ணையன் றென்னைக் கண்டக்கணித்த—கண்ணாளா
இச்சித் துனையடைந்த வேழையே னுன்னருளை
மெச்சித் துதிகண் மிகவிசைத்தேன்—இச்சையொடு
நேசித் தருள்செய்ய நீட்டித்தால் யானுன்னை
ஏசிப் பழிப்பே னினி. ௨எ

[நேரிசை வெண்பா]

96. பெருந்தகைசேர் வேங்கடவப் பெம்மானே பேயேன்
தெரிந்துந் தெரியாதுஞ் செய்த—அரும்பிழைகள்
யாவும் பொறுத்தருளி யாதரிக்க வேண்டுவனென்
தாழ்வுகளை யெல்லாந் தவிர்த்து. ௨அ

97. உற்றார்க் குதவு முறுதிசால் வேங்கடவா
அற்றார்க் கரணுநின் னன்பர்க்கு—மற்றார்க்
களப்பரிய வெம்பிறவிப் பேராழி யாவின்
குளப்படிநீ ரன்றோநீ கூறு. ௨௯

98. வாழ்வு தருரமணா வன்கால பாசத்தால்
மாழ்கிப் பதைத்தவல மாக்கடலின்—மூழ்கும்
மரணத் தறுவாய்க்கண் மாட்டேனிப் போழ்தே
சரணத் தடைந்தேன் சரண். ௩0

99. ஆற்றிற் கரைத்தபுளி யாகா தடியேனை
ஏற்றுக்கொண் டாண்ட வியைபினால்—ஆத்தனே
உண்ணாட்ட மில்லாத வூத்தையே னாயினுநின்
கண்ணோட்டஞ் செய்தல் கடன். ௩௧

100. அன்னையினு மென்பா லளிசெய்து தஞ்சமென
உன்னையடைந் தேனுணர்வை யுண்முகமாய்த்—தன்னையலால்
வேறொன்றுங் காணா விதஞ்செய்தாய் வித்தகனே
மாறொன்றுங் காணா வகை. ௩௨

[பஃறொடை வெண்பா]

101. ஞான சிகாமணியே நல்வேங் கடரமணா
மோனவடி வான முழுமுதலே—மானமற
உண்ணு முணவுவழி யோடலன்றித் தன்னைத்தான்
எண்ணு முணர்வுவழி யெய்தாதேன்—புண்ணியனாம்
உன்னை யடைந்த வுறுதவத்தா லுண்மையாய்
என்னை யடைந்துவிட்டே னின்று. ௩௩

102. திறல்சேர் விபுதர்புகழ் திப்பியமெய்ஞ் ஞான
விறல்வேங் கடரமண வேளே—அறவுமே
என்னை மறந்த வெளிமையா லெவ்வமுழந்
துன்னை யடைந்த வுறுதியால்—என்னை
அறிவா வுளதா வதிசுகமா வாய்ந்தோய்ந்
திறுமாந் திருக்கின்றேன் யான். ௩௪

[நேரிசை வெண்பா]

103. ஞானந் தவாதகுரு நாதனா வந்துதித்த
மோனந் தவாத முழுமுதலே—ஆனந்தம்
பொங்கெழிலி யாகிப் புதுக்கினையா லெம்முயிரை
எங்கெழிலென் ஞாயி றெமக்கு. ௩௫

[பஃறொடை வெண்பா]

104. முன்னைப் பலபிறப்பின் முட்டின்றிச் செய்தவத்தால்
உன்னைப் பலர்பலர்தா முற்றிருக்க—நன்னயஞ்சேர்
வாலறிவ மெய்ஞ்ஞான வள்ளன்மை வாய்ந்தொளிரும்
சீலரம ணானந்த தேசிகனே—ஞாலமிசைக்
கைம்மலர்மே னெல்லிக் கனியாக மெய்யுணர்ச்சி
இம்மையிலே யேழையேற் கீகைக்குக்—கைம்மகவு
தன்மே லிரங்குறுநற் றாய்போற் றடங்கருணை
என்மே லிருந்தவா றென். ௩௬

[நேரிசை வெண்பா]

105. பூச்சியனு நீயுமே பூச்சியனே பூசகனுப்
பேச்சியலும் யானுமப் பெற்றியனே—ஏச்சறுபே
ராசையால் யானுனக் காற்றுந் துதியுருவப்
பூசனையு மற்றன்று புகல். ௩௭

106. அன்னியமோ வாகா தனனியமா வென்றோடு
மன்னியவோ ரெல்லையிலா வத்துவே—உன்னையான்
மெச்சக் கருதலொடு மெச்சித் துதிப்பதூஉம்
பொய்ச்சழக்கே யன்றோ புகல். ௩௮

107. அன்பே வடிவா வமர்ந்தரம ணானந்தா
என்போ லடியா ரிடர்நீக்கி—நம்பாநீ
வாழியோ வாழி வளர்பிறையே போலென்றும்
ஊழிதோ றாழி யுயர்ந்து. ௩௯

## படர்க்கைப் பரவல்

108. அற்புதமாய் நின்றவரு ணாசலத்தே யானந்தக்
கற்பகமாச் சேர்வேங் கடரமண—சற்குருதான்
செய்யுங் கருணைத் திறமல்லாற் சீரியவே
றுய்யுநெறி யில்லை யுயிர்க்கு. ௧

109. தன்னே ரிலாத தயாளரம ணானந்தன்
என்னே ரெளியவர்க்கு மின்புதவ—உன்னி
மகிதலத்தில் வந்தருளும் வான்கருணைக் கம்மா
அகிலமுமே யாற்ற லரிது. ௨

110. வெற்பருணை போல்வான் வினையேற் கருள்சுரந்து
நற்பொருளீ தேயென்ன நல்கினான்—அற்ப
துராசை யெனுங்கொடிய துவ்வாமை நீக்கி
நிராசை யெனுமோர் நிதி. ௩

111. எத்தொழிலு மில்லாத வேவலோ டஞ்சாத
முத்தொழிலு மாற்றுங் குருமூர்த்தி—நித்த
வரவுசெல வில்லா வளத்தோ டளித்தான்
இரவுபக லில்லா விடம். ௪

112. பிறவியழித் தென்னைப் பெரிதளிப்பா யென்றேன்
மறதியளித் தென்னை மயக்கிச்—செறிவளித்தான்
எண்ணா லயர்ந்த விரண்டற் றிறைமயமா
நண்ணுகுரு நாதரம ணன். ௫

113. புக்கிலையே வேட்டுப் புலம்பெய்தி நின்றேனுக்
குச்சமுறு சாந்தி யுரனெய்த—எச்சிற்
பரிகலமு நல்கிப் பரங்கருணை செய்தான்
அரிபிரமர் காணறியா தான். ௬

114\. மதியை யகப்படுக்கு மாயை யுலகை
மதியி னகப்படுத்து வைத்தான்—மதிக்கும்
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகையெளி துய்த்துணர வைத்து. எ

115\. நிசரதமாஞ் செம்பொருட்க ணில்லா தலையும்
மசரதமாய்த் தோற்று மயக்க—வசமாம்
நனவைக் கனவாக நாட்டினான் ஞான
கனவேங் கடரமணன் காண். அ

116\. கனவா முலகாற் கலக்குண்டு காமத்
தினவாற் றினப்பட்டுச் செத்தேன்—நனவாய
மெய்யுலக வீட்டில் விழிப்பித்தான் வேங்கடனென்
ஐயுணர்வை முற்று மறுத்து. கூ

117\. நெறியா தெனவடைந்த நீசனேன் முன்போல்
அறியாத் துயில்வா யமிழ்ந்திச்—செறியா
தறிதுயில்வாய் மூழ்கி யமர்ந்திருக்கச் செய்தான்
அறிஞன் ரமண னவன். க0

118\. சுரமரம்போற் காப்பாற்றுந் தூய ரமணன்
அரணறியா தேங்கி யடைந்தேற்—கருளினான்
வெள்ளம் படுகடலின் மேலும் பலவிடும்பைக்
குள்ளங் கலங்கா வுரன். கக

119\. குடித்து வெறித்த குரங்கா முளத்தை
அடித்துக் கிடந்த வரவாக்—கிடத்தினான்
எண்ணும் மெண்ணி யிருப்பாரைக் காத்தருளும்
அண்ணு மலையண்ண லான். க௨

120. பொன்னையே யாதிப் பொருள்களையே யல்லாமற்
றன்னையே யோர்சிறிதுஞ் சாராத—என்னையுமே
பூனைபோற் கவ்விப் புலிபோல் விழுங்கினான்
மாறா மருண்டேனை மன். கங

[பஃறொடை வெண்பா]

121. பத்துத் திசையும் பரந்த சுயஞ்சோதி
வத்துவா வுற்றவர வேங்கடவன்—மத்தனேன்
மானாபி மான மயக்கறுத்த வவ்வாற்றால்
யானாகி நின்ற வெனைவிழுங்கித்—தானான
தற்பரமா வெங்குமே தானொளிர்ந்து தாரணிக்குக்
கற்பகமா நின்றான் கனிந்து. கச

[நேரிசை வெண்பா]

122. திட்டிவிட மாக்கொல்லுந் தேசிகன்றன் முன்னிலையிற்
சட்டமொடு சார்ந்துதலை சாய்ந்தாயே—இட்டமாய்
ஒப்புயர்வின் றாக வுதவியவென் னெஞ்சமே
எப்படியால் வாழ்வே னினி. கரு

123. கண்ணெச்சில் சாலக் கதுவுமென் றாலத்தி
அண்ணற்குச் சுற்ற லறிவன்றா—கண்ணெதிர்ந்தார்
சாவாது சாகின்ற சாவோம்ப வேண்டினவர்க்
கோவாது சுற்ற லுணர்வு. கசா

124. கொச்சைமட மாக்கள் குழுப்பட் டடாதபுலத்
திச்சைவழிச் செல்லு மியல்பினேற்—குச்சமாம்
மெய்ஞ்ஞான நல்கி விளக்கினா னென்மனிலை
பொய்ஞ்ஞால வாசை பொடித்து. கஎ

125. என்னையும் பொய்யாக்கி யென்பிறவிப் பேரிடும்பை
தன்னையும் பொய்யாக்கித் தானேயாய்த்—தன்னிடத்துத்
தன்னையே தான்காட்டித் தானின்றான் மெய்ம்மையாத்
தன்னையே தான்காணத் தான். கஅ

126. சச்சிதா னந்தமாந் தன்னைத் தவிரமற்
றெச்சத்தை யெல்லா மிலவாக்கி—அச்சத்தை
எல்லா மகற்றினா னென்றுரைத் தன்விழியாற்
கொல்லாது கொல்லுங் குரு. கசு

127. அடுப்பா ரவலங்க ளத்தனையும் போக்கிக்
கடுப்பா ரகந்தை கடிந்து—கொடுப்பான்
அருணைக்கண் மேவி யருண்மாரி பெய்யும்
கருணைக்கண் ணாளன் கதி. உ0

128. உள்ள முதித்தொடுங்க லுற்றவித யத்தொளிக்கும்
கள்ளரம ணனந்தன் கற்பிப்பான்—கள்ள
அடிச்சமுக்காய் நின்ற வரும்பிறவி மாய
முடிச்சவிழ்க்கும் விச்சை முறை. உக

129. உண்மையே தானா வொளிர்தலாற் றன்சொருப
உண்மைக் கயலேது மோராத—வொண்மையான்
அச்சமொடு தன்னை யடைந்தார்க் களித்தருள்வான்
உச்சமா மோன வுரன். உஉ

130. இருப்புமய மான விதயத்தா னெஞ்சா
நெருப்புமய மாக நிமிர்ந்த—பொருப்புமயம்
ஆனகுரு நாதனடி யாரகத்தைச் சுட்டெரிப்பான்
மோனவுரு வாக முடித்து. உங

131. கற்றோர்க ளெல்லாங் கரங்குவிக்கும் வேங்கடவன்
உற்றோர்கட் கெல்லா முதவுவான்—முற்றத்
தவந்தா னுஞற்றினர்க்குஞ் சார்தற் கரிதாய்
நிவந்தவுப சாந்த நிலை. ௨௪

132. ஏந்திய கொள்கை யியைந்தரம ணாசிரியன்
சாந்தி நிறைந்தசாம் ராச்சியத்தைச்—சார்ந்தார்க்குச்
சிட்டித் தளிப்பான்றன் றிட்டியா லாந்தர
திட்டி யுளதாகச் செய்து. ௨௫

133. வினைவிளைவுக் கேற்ற விதத்தாலே யன்றித்
தனைவிழைவார் வேட்கைக்குத் தக்காங்—கனவரதம்
சாவா மருந்துவமை சாலாத புத்தமுதம்
ஈவா ரிவனல்லால் யார். ௨௬

134. மெய்ப்பொருளைக் காண விழைந்தார்க்கு மேதினிமேற்
கைப்பொருளின் மேலுங் கடவதா—அப்பொருளைத்
திண்ணமாக் காட்டுவோர் திருவேங் கடரமண
அண்ணலா ரன்றிமற் றார். ௨௭

135. பேசாக் கடவுட் பெருஞ்சிலைபோ லன்றியிவர்
பேசுங் கடவுளெனும் பெட்பறிவார்—நாசமிலாப்
புத்தமுத முண்ணும் புலவருமே காணாத
வித்தகவீ டெய்துவார் மேல். ௨௮

136. செம்மையாம் வெற்றுரைகள் சொற்றாளைப் பின்னொருவன்
நொய்ம்மையாற் கட்டழித்த நுட்பம்போல்—என்னை
அடியோ டறவொழித் தானந்த மாக்கும்
கொடியோ னெமது குரு. ௨௯

137. ஓரிடமுந் தங்காம லோடோடித் தேடியுமே
காரிருளை யென்றுந்தான் காணாத—சூரியன்போல்
வாடாத மாமாயை வல்லிருளைக் காணவே
கூடாதா னெங்கள் குரு. ௩௦

138. அண்ணா மலையடியில் வாழு மருமருந்தை
எண்ணும லெண்ணி யிருப்பாரை—நண்ணாது
வெய்ய வினையால் விளையுங் கொடும்பிறவி
ஐயமிலை நெஞ்சே யறி. ௩௧

(திருநாமச் சிறப்பு)

139. வாயை யடக்கினேன் மான்மா வெனதுமனப்
பேயை யடக்கினேன் பேருரைக்கிற்—பாயலுடை
எண்ணமெழும் போதே யினிதாகக் கொல்கென்ற
அண்ணல் ரமண னவன். க

140. வேங்கடவா வென்றால் வினைபோம் ரமணவென
ஓங்கவுரைத் தால்மர லோகமாம்—காங்கெயனை
ஒப்பான சீர்வேங் கடரமண வென்னுமுரை
தப்பாது முத்தி தரும். உ

141. மருள்சேர் மனத்தோரா வந்தடைந்தார் தம்மைத்
தெருள்சேர் தவஞானத் தீயால்—இருள்சேர்
மயரின் பவப்பிணியை வாட்டும் ரமணப்
பெயரின் பெருமை யிது. ௩

142. கழிபல்வாந் தெய்வக் கடவுளர்தம் பேரால்
ஒழிவடையாத் தங்க ளூரங்கெட் — டழிவனவே
காம வெகுளிமயக் கங்கள் குருரமண
நாம மகிமையத னால். ச

(திருவுருச் சிறப்பு)

143. உள்ளமிகு மாதி பகவ னுவந்தளித்த
வள்ளுவர்வாய் வண்மையே வண்மைபோற் — றெள்ளும்
அழகொடுசேர் சுந்தரப்பே ருய ரமண
அழக னழகே யழகு. க

144. சமையாத வெம்மைச் சமைவித்துச் சாவா
அமுத மயமாக்கிற் றங்கோ — ரமணன்
இமையாத நாட்டத் திறைவருமே காண்டற்
கமையாத மோன வழகு. உ

(திருவடிச் சிறப்பு)

145. உய்யா விழுமந் தருகினுமே யொன்றுந்தான்
செய்யாமற் செற்றார்க்கு மின்னாத — செய்யா
வதமே சிறந்த வதம்போல் ரமணன்
பதமே சிறந்த பதம். க

146. வில்வத் தழையிட்டு வீழ்வார்க்கு மெய்ஞ்ஞானச்
செல்வியைக் கூட்டிச் சிறப்பிக்கும் — நல்ல
மகவான் பதத்தை வழங்கும் ரமண
பகவான் கமல பதம். உ

147. எம்மனோர் வெம்மனரா யெய்தினர்க்கு மிம்மையினும்
அம்மை யணித்தாக வாக்கிற்றால்—செம்மையாம்
மெய்ப்பொருளே யாக விளங்கி யடியார்க்குக்
கைப்பொருளாம் பெம்மான் கழல். ௩

148. ஆக்கை யளிக்கை யழிக்கையுடை யாண்டானும்
யாக்கையுடை யானுமுடைத் தாடலையின்—சேர்க்கையால்
ஈதா வழிந்ததே யென்றலைமேற் றன்கையால்
வேதா விதித்த விதி. ௪

149. மூவருமே காணாத மூர்த்திரம ணனந்தன்
ஏவலிடை நிற்போர்க் கெளிமையான்—தேவர்
முடித்தார்க்குஞ் செய்ய முளரிமலர்ப் பாதம்
பிடித்தார்க்கு முண்டோ பிறப்பு. ௫

150. நெருப்புமய மாக நிமிர்ந்தெழுந்த ஞானப்
பொருப்புமய மாகும் புனித—குருப்பதமாம்
வேங்கடவப் பெம்மான் விரைமலர்ப்பூந் தாணிழலின்
பாங்கடைவார்க் கில்லை பவம். ௬

151. வேத சிரத்தில் விளங்குரம ணனந்த
போத குருவருளைப் புந்திசெய்து—பாதத்
துடல்பொரு ளாவிகளை யொப்படைக்க வுண்டாம்
கடல்பொருமா னந்தக் களிப்பு. ௭

152. ஆவல்கொண் டென்னை யழைத்துத் திருவருளால்
ஏவல்கொண் டாண்ட ரமணபிரான்—சேவடிப்போ
திம்மையோ டென்னை யிருமையுங் கூடிய
மும்மையுநாஞ் சூடு முடி. ௮

153. பாண்டச் சிறையிலகப் பட்டிரங்கு மாவியெனை
ஆண்ட ரமண னடிகளே—நீண்ட
வினையின் றொடரால் விசிப்புண் டுயிர்தான்
துணையுங் கதிக்குத் துணை. ௯

154. ஞான வரையாக நாட்டு முபசாந்த
மோனவரை வேந்துக்கு மௌலியாய்—ஆனகுரு
மூர்த்தி யடிகளே மோகத்தை மன்பதைதாம்
பூர்த்தியாத் தாண்டும் புணை. ௧௦

155. வேட்கையுறு நல்குரவு மேவா விழுச்செல்வ
வாழ்க்கையிடை மேன்மேலும் வாழ்விக்கும்—பூட்கையால்
அன்பரையாட் கொள்ளுஞா னேசா னடித்துணையே
மன்பதைகட் கெய்ப்பின்கண் வைப்பு. ௧௧

(திருவிழிச் சிறப்பு)

156. தேனுந்து செந்தா மரையிரண்டு தாஞ்செறிந்த
ஆனந்த வாரி யனைத்தரோ—மோனத்தாற்
சீர்த்தியொன் றில்லாச் சிறியேனை யாட்கொண்ட
மூர்த்திரம ணேசன் முகம். ௧

157. காதுற்ற வேங்கடவன் கண்ணிரண்டுங் காணுங்கால்
மோதுற்ற புன்பிறவி முந்நீர்வாய்ப்—பேதுற்ற
காலை யடியார் கருத்தின் கலங்கரைந்து
வேலைவாய் நின்ற விளக்கு. ௨

158. மானாபி மான மடவோரே யாயினுமெய்ஞ்
ஞானிகளே யாக நடவாரோ—ஞானக்
கொடைமடம் பூண்ட குருநாதன் வாயிற்
கடைகுறுகிக் கண்ணின்றக் கால். ௩

159. பக்குவமே யில்லாப் பதிதரே யானாலும்
முக்குணமும் பற்றா முனைவன்றன்—அக்கமலர்க்
கான்முக மாவரே லன்னார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து. ௪

160. எண்ணுக்கு மேனை யெழுத்துக்கு மெட்டாத
விண்ணுக்கும் விண்ணாய வீட்டுக்கும்—பண்ணவர்தம்
கண்ணுக்குங் கண்ணாகக் காண்வேங் கடரமணன்
கண்ணுக்கு மொன்றே கடை. ௫

161. பித்தாக முற்றிலும் பேதுறுத்தாற் போன்றென்னைச்
சித்தாகச் செய்த திறலினாற்—சத்தாக
மாத்திரமோ வானந்த வாரிதியா வுஞ்செய்த
நேத்திரத்தான் வேங்கடவனே. ௬

162. புன்புலா லொன்றோ பொருண்மேலும் போந்தபா
ழுன்புடைய தாகி யலமந்த—மன்பதையுள்
ஆர்வ மொழுகு மருணா சலரமணன்
பார்வலரா லுய்ந்தனர் பலர். ௭

163. தண்ணொன் றருள்பொதிந்த தன்னிருகண் ணோக்கமே
துண்ணொன் றகத்தைச் சுடுதலான்—எண்ணின்றி
மாயோக ரெல்லா மதிக்குங் குருபரனைத்
தீயோனென் றேயுணர்ந் தேன். ௮

(தரிசனப் பயன்)

164. ஆதரத்தான் மன்னுயிரை யாளுங் குருரமண
நாதனைத்தாங் காண்பார் நலிவனைத்தும்—கேதமுற்
றஞ்சா நடுநடுங்கி யாடிப் பெருங்காற்றிற்
பஞ்சாப் பறக்கும் பரிந்து. க

165. அருணா சலத்துரம ணாச்சிரமம் வாழும்
கருணா கரன்முகத்தைக் காண்பீர்—திருவருளாற்
சோக மடங்கச் சுகமெய்தச் சங்கற்ப
வேக மடங்கி விடும். உ

166. கமலமுகை போலிதயக் கந்தி யருத
சமய வெறித்தருக்கர் தேறு—ரமண
அழகனைக் கண்ட வடியவ ருள்ளம்
அழியா திருத்த லரிது. ங

167. இன்னைமைக் கெல்லா மிருப்பிடமாம் புன்பிறவி
தன்னை லிடைந்தவனைச் சார்ந்தாருள்—அன்னன்
திருப்பார்வை யாற்றஞ் செருக்கழிந்து சாவா
திருப்பார்கள் யாரு மிலர். ச

(மாண்புரைத்தல்)

168. தவராஜ யோகத் தலைவராய் நின்ற
நவநாத சித்தருமே நாடும்—சிவஞான
யோகி சிறந்தமதி யூகி சிதாகாச
தேகிரம ணானந்த தேவு. ரு

169. தன்னிலையிற் றானிருந்து சற்றுஞ் சலியாமல்
அன்னியமே காணா தடங்கினேன் — பன்னும்
கலைஞரெலாந் தேர்வேங் கடரமணன் றோற்றம்
மலையினுமே மாணப் பெரிது. ௨

170. அளித்திறலே முற்று மவிர்ந்தொளிரக் காண்டும்
களித்தெறலோ காண்ட லிலமால் — விளியாத்
தெறலளிகள் சேருந் திறலுடையோர் போற்றும்
விறலந் தணரமணன் மாட்டு. ௩

(சமயாதீத நிலை)

171. எம்மதமும் பற்றா ரமண குருநாதன்
றன்மதமாத் தம்மதமே சாற்றுவார் — அம்மா
மனமொழிகட் கெட்டாச்சின் மாத்திரமா மன்னோன்
றனதுமதந் தாமுணரா தார். க

172. எம்மதமுஞ் சம்மதமா மம்மதமே யல்லாமல்
இம்மதமென் றொன்றை யியம்பவே — நிம்மதியே
நேர்வேங் கடரமண நீதற் கிலையம்மா
சார்படிகத் தன்மையெது சாற்று. ௨

(ஆச்சிரம உண்மை)

173. ஆண்டெனவே யாண்டு மடங்கிமன நிற்றலால்
ஈண்டுபுனல் சூழுலக மெங்கணுமே — வேண்டி
அமரர் பலரு மடையும் பெரிய
ரமணதே வாச்சி ரமம். க

174. வாலரம ணேசன் மகிதலத்தோர் தாபனத்தின்
மூலமெனக் கூறுவார் மூடரவன்—சால
அணுக்கரா யுள்ளாமூமலான்ம சித்த
கணத்தினர் மூலக் கரு. உ

175. மாச்சிரம மின்றாக மன்னுயிரைக் கண்வளர்த்தும்
தாய்ச்சிரம ணனந்தன் சந்நிதியை—ஆச்சிரமம்
என்றலிழுக் கந்தமத யானைகளைக் கண்ணேறு
கன்றியடும் வெம்போர்க் களம். ௩

176. ஆன்ம நிலைக்க ணமர்த்தலே ஞானபர
மான்மகுரு நாதனரு ளாதலால்—ஆன்ம
ரமணசந்நி தான ரகசியமான் மாவில்
அமனஸ்க நிட்டையே யாம். ச

177. என்னென்று நீர்நினைந்தீ ரெங்கைமீ ரெங்களிறை
என்றும்வா ழெங்க ளிதயத்தை—நன்னர்
அமுதக் கடலன்றோ வந்தப் பெரிய
ரமணதே வாச்சி ரமம். ரு

178. எங்கெங்கே யெந்தை ரமண னிருக்குமோ
அங்கங்கே நல்ல வருளிருக்கும்—அங்கங்கே
அன்பிருக்கு மிக்க வறனிருக்கும் பொய்யாப்பே
ரின்பிருக்கு மெல்லா மினிது. சா

(உண்மைநிலை யுரைத்தல்)

179. மூர்த்திதலந் தீர்த்தமெலாந் தானாய் முடிந்தபொருள்
ஆர்த்தியொடு தாமவற்றை யாடினர்க்கு—வார்த்தைசொலி
அண்ணா மலைச்சா ரசையுமே யாண்டியாய்க்
கண்ணால் வினைகள் கடிந்து. க

[பஃறொடை வெண்பா]

180. உருவும் பெயரு மொருகுணமு மின்மை
மருவி யிருந்தும் மனித்த—உருவால்
இனித்தபே ரின்ப ரமணப் பெயராற்
குணித்தவோ ராதி குணத்தாற்—பணித்தவிரு
கண்ணா லனைவருமே காணக் கடைக்கணித்
தண்ணா மலைச்சா ரமணனுமே—புண்ணாய்
அழுங்கி யகமழிந்த வாவியா மென்னை
விழுங்கி யொளிரும் வெளி. ௨

[நேரிசை வெண்பா]

181. சான்றா நடுநின்று சச்சிதா னந்தகனத்
தோன்றாத் துணையாஞ் சொரூபத்தைச்—சான்றோர்தாம்
வேங்கடப்பே ராலே விளம்புவா ரப்பொருளின்
பாங்கேபே ரின்பப் பயன். ௩

182. என்று முளதா விடைவிடா தெவ்விடத்தும்
துன்றும் பொருளே சுழியல்வாய்—அன்று
பிறவா தருளாற் பிறந்த பிறப்பால்
இறவா திறந்தார் பலர்.

183. பிறவாதே யென்றுமொரு பெற்றியனா நின்றே
அறவாழி யுய்க்கு மரசாய்ப்—பிறப்பான்
எவனோ நிதமறவா தெண்ணுவா ருள்ளத்
தவனே ரமண னறி. ௫

(நூலும் பயனும்)

184. வேங்கடவன் வீற்றிருக்கும் வேதிகைக்கட் பெம்மானே
டாங்கடுக்க லாக வமைந்தநூல் — ஓங்கடுக்கல்
மிக்கதீங் கட்டியொடு வேய்ந்த வெறுங்கருப்பஞ்
சக்கைமலை யென்னுந் தகைத்து.

(மௌனோபதேசச் சிறப்பு)

185. கல்லா தனவெல்லாங் கற்றதனால் வாய்ப்பேச்சின்
மல்லாரு மற்றையார் மாட்டுப்போல் — அல்லாமல்
ஏச்சே யிலாதரம ணேசன்முன் மோனமாம்
பேச்சே பெரும்பயன்சேர் பேச்சு. க

186. வருவோர் சிலவுரையால் வாய்திறந்த லின்ப
குருநாதன் கூறுது கூற — அருவிபோற்
செல்லாது செல்லுமுப தேசத்தைத் தம்முரையாம்
கல்லால் வழியடைத்தல் காண். உ

187. தன்னிலையிற் றானிருந்தே சச்சிதா னந்தமய
நன்னிலைக்கே யுற்றுரை நாட்டுமவன் — முன்னிலையில்
ஊற்றமொடு வாளாமை யுற்ற வுரவோரே
ஆற்றப் பெரும்பயன்கொள் வார். ௩

(பணிதற் பயன்)

188. கதிர்முன் பனியாகக் கழலுமே யின்பப்
பதிவேங் கடரமணன் பாலே — சதிபோல்
ஒழுகுந் தரத்தா லுழுவலன் பாகித்
தொழுவார் பிறவித் துயர். க

189. இல்லவே யில்லை யிருள்சே ரிருவினையைக்
சொல்வேங் கடரமணக் கோமானை—அல்லால்
மறந்தும் புறந்தொழா மாந்தர்களுக் கண்ணும்
பிறஅண்டுச் சென்றடையும் பேறு. ௨

## (நிந்தாஸ்துதி)

190. சீட னொருவன்றன் சிந்தையைக் கொன்றகொடுந்
தோடங் குருவைத் தொடராமல்—வீட
நினைத்து நினைத்துத்தன் னெஞ்சமுங்கச் செய்தல்
அனைத்தோ குருவி னருள். ௧

191. சுற்றக் குழாம்பலவுஞ் சூழுங் குருபரனை
முற்றத் துறந்த முனிவனெனல்—தெற்றவே
பட்டப் பகலை யிரவாப் பறைகின்ற
சட்டப் படியெனச் சான்ம். ௨

## (பெற்ற பேற்றை வியந்தல்)

192. நாவுக் கரசை நடுக்கியவெஞ் சூலைநோய்
சேவிக்கத் தீர்த்தான் சிவபிரான்—ஆவிக்
கமுதா யுரும்பிணிகள் யாவையுமே தீர்த்தான்
ரமணகுரு நாத னெமக்கு. ௧

193. அங்கண் விசும்புடையா தித்தீற் கதிரளிரும்
திங்கட் கருஞ்சுரமுஞ் சேர்ந்தாலும்—பங்கமுடை
ஏதமினி மேற்சேரா தெந்தை ரமணகுரு
நாதனருள் பெற்ற நமக்கு. ௨

194. சமர்த்தர்க் கிலக்காவ தாரணிமா தேவர்
சுமக்குஞ் சுருதிகளின் சொற்கள்—எமக்குச்
சுயம்புவாஞ் சோதி ரமண னியம்பா
தியம்பு மொழியே யிலக்கு. ௩

195. அச்சமொரு சற்று மணுகா தகன்றோட
உச்சமுறு சாந்தி யுரனெய்த—நிச்சயமாய்
என்னை நடத்து மிறைவ னருளிருக்கப்
பின்னைக் கவலுறுதல் பேது. ௪

196. உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே
வள்ளலாய் வந்தரம ணானந்தன்—வெள்ளமாய்
மாந்திக் களிப்பெய்த வாவென் றெனையழைத்துச்
சாந்திநீர் வார்த்த தலை. ௫

197. நீதனிலை நில்லாதே னெஞ்சத்தைப் பேதித்த
பேதமதி யெல்லாம் பிளந்தகுரு—நாதரம
ணாச்சிரமந் தன்னுள்ளே யன்றேன் றிருமுன்னர்ப்
போய்ச்சிரமந் தீர்ந்தேன் புகுந்து. ௬

198. தூர்ப்பரும்பே ராசைத் தொடக்கற்றுத் தானேயா
வாய்ப்பரும்பே ரின்பநிலை வாய்த்ததுவே—தேய்ப்பரிய
வெம்மாயை தேய்த்த விறல்வேங் கடரமணப்
பெம்மானை யானடைந்த பின். ௭

199. தேய்ப்பரிய மாயச் செருக்கிரண்டுந் தேய்ந்தனவே
வாய்ப்பரிய சாந்தநிலை வாய்த்ததுவே—சாய்ப்பரிய
வெம்மாயை சாய்த்த விறல்வேங் கடரமணப்
பெம்மானை யானடைந்த பின். ௮

200. எண்கூடா வத்துவித வேகத்தை யவ்வேகக்
கண்கூடாக் கண்டேன் கலிதீர்ந்தேன்—பண்கூடு
சந்தமறை தம்மாலுஞ் சாற்றரிய கேவலமாம்
எந்தை ரமணனரு ளோர்ந்து. ௯

201. பண்டறியே னந்தப் பரப்பிரம்ம மென்பதனைக்
கண்டறிந்தே னின்று களிப்புற்றேன்—தண்டூன்றி
ஆண்டி வடிவா லசையுமே யன்பரைத்தான்
வேண்டி மலர்க்கண் விழித்து. ௧௦

[பஃறொடை வெண்பா]

202. வானவர்தாம் வாழ்த்தருணை வாழ்மா தவரமணக்
கோனடிதாங் கூடாக் குறைதவத்தால்—ஏனையோர்
சும்மா விருப்பதனைச் சோதித்துப் பார்க்குங்கால்
அம்மா மிகவருமை யஃதென்பார்—எம்மால்
எதுவேனு மன்றமனத் தெண்ணமிட நேரின்
இதுவே யருமை யெமக்கு. ௧௧

[நேரிசை வெண்பா]

203. மெத்தவுமே விந்தை விபுதரம ணானந்தன்
பத்தியிலார் தேற்கும் பரப்பிரம்ம—வித்தை
எளிதாக்கி யென்னை யிணையில்பே ரின்ப
வெளியாக்கி விட்ட விதம். ௧௨

(ப்ரேமாநுபவம்)

204. ரமணன்மேல் வைத்தவநு ராகத்தேற் குள்ள
அமலப்பூஞ் சேக்கை யகத்தே—கமலத்தேன்
உண்டுகளி வண்டா வுறங்கிக் கிடந்தொழிதல்
உண்டுகொலோ வோருருவ முற்று. ௧

205. யமுனா நதிதீரத் தெம்விரக தாபம்
சமனமாச் செய்த சரிதா—ரமணா
கருணா ரசமொழுகுங் கண்ணாளா நின்றன்
சரணா விந்தஞ் சரண். உ

(உரையுவந் தருளிய கருணைபா ராட்டல்)

206. அத்துவித வுண்மை யறிந்தடங்கி நில்லாதேன்
கத்துமுரை யத்தனையுங் காதலித்துப்—புத்தமுதம்
உண்ணுமா றுட்கொண்டா னுள்ளத்தால் யோகியரும்
எண்ணுமா றோரா விறை.

(வாழ்த்து)

[பஃறொடை வெண்பா]

207. எவ்வெவ் வுருவுடைய வெவ்வெந்தத் தெய்வத்தை
எவ்வெவ் வடியார்க ளெண்ணுவார்—செவ்விசேர்
அவ்வவ் வுருவுடைய வவ்வந்தத் தெய்வதமாய்
அவ்வவர்க்குக் காட்சியளித் தானந்தப்—பவ்வத்தே
மூழ்கித் திளைக்க முறையா லருள்புரிவான்
வாழ்க ரமண மகான்.

## ஸ்ரீ ரமணதேவ மாலை

# செய்யுள் முதற்குறிப் பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அங்கண்விசும்புடை ... | ருஅ |
| அச்சமொருசற்றும் ... | ருக |
| அடிப்பாரவலங்க ... | உசு |
| அடும்பாவ ... | கச |
| அண்ணாமலைக்கீ ... | உ௦ |
| அண்ணாமலையடியில் ... | உஅ |
| அண்ணாமலையடிவா ... | கசு |
| அண்ணாமலையாளி ... | கூ |
| அண்ணாமலைரமணா ... | ச |
| அத்துவிதவுண்மை ... | சக |
| அப்பன்பணித்தபடி ... | க௦ |
| அப்பாவைத்தேடி ... | க௦ |
| அருணாசலத்து ... | ருரு |
| அருவமேனீயா ... | கசு |
| அளித்திறலே ... | ருச |
| அற்புதமாய்நின்ற ... | உரு |
| அன்பே..என்போ ... | உஉ |
| அன்பே..வன்பே ... | கஅ |
| அன்னியமோவாகா ... | உஉ |
| அன்னைபிணியா ... | ௫ |
| அன்னையினுமென்பா ... | உக |
| அன்னையேயாவிட் ... | கூ |
| **ஆ** | |
| ஆக்கையளிக்கை ... | ரு௦ |
| ஆசானேயுன்னை ... | க௫ |
| ஆண்டானே ... | கச |
| ஆண்டெனவே ... | ருச |
| ஆதாரத்தான் ... | ருரு |
| ஆதாரத்தோடென்னை ... | ச |
| ஆரக்கொடுப்பா ... | ரு |
| ஆவல்கொண்டென்னை.. | ரு௦ |
| ஆவலாயுற்ற ... | எ |
| ஆற்றிற்கரைத்த ... | உ௦ |
| ஆன்மநிலைக்கண் ... | ரு௫ |
| ஆன்றோரிறைஞ்சு ... | சு |
| **இ** | |
| இடும்பையனைத்துக்கு... | கக |
| இரவின்சமய ... | ரு |
| இருப்புமயமான ... | உசு |
| இல்லவேயில்லை ... | ருஅ |
| இன்றைமைக்கெல்லா ... | ருரு |
| **ஈ** | |
| ஈங்கேயிருந்திங் ... | ச |
| **உ** | |
| உண்ணாட்டங்கூட்டு ... | கஉ |
| உண்மையேதானு ... | உசு |
| உய்தற்குளங் ... | கஎ |
| உய்யாவிழுமங் ... | உக |
| உருவும்பெயரு ... | ருசு |
| உலகெலாமோடி ... | ரு |
| உள்ளமிகுமாதி ... | உக |
| உள்ளமுதித்தொடுங்க... | உசு |
| உள்ளுதோறுள்ளுதோ... | ருக |
| உற்றார்க்குதவு ... | உ௦ |
| உன்னிலேதோன்றி ... | ௫ |
| உன்னைப்பரம் ... | அ |
| **எ** | |
| எங்கெங்கேயெந்தை ... | ரு௫ |
| எண்கூடாவத்துவித ... | ச௦ |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| எண்ணுக்குமேனை | ... | ௩௨ |
| எத்தொழிலுமில்லாத | ... | ௨௩ |
| எந்நிலையுஞ்சற்று | ... | ௧௯ |
| எம்மதமுஞ்சம்மத | ... | ௩௪ |
| எம்மதமும்பற்ற | ... | ௩௪ |
| எம்மனோர்வெம்மன | ... | ௩௦ |
| எம்மையினு | ... | ௧௬ |
| எவ்வெப்பொருள்க | ... | ௧௮ |
| எவ்வெவ்வுருவுடைய | ... | ௪௧ |
| என்பாகம்பற்றி | ... | ௮ |
| என்பெல்லாம்பற்றி | ... | ௭ |
| என்றுமுளதா | ... | ௩௬ |
| என்னென்றுநீர்நினைந்தீ | | ௩௫ |
| என்னைமறந்தாளோ | ... | ௭ |
| என்னையும்பொய் | ... | ௨௬ |
| எனுஅதகப்பே | ... | ௧௯ |
| **ஏ** | | |
| ஏந்தியகொள்கை | ... | ௨௭ |
| **ஒ** | | |
| ஒவ்வாதமாமடலு | ... | ௧௩ |
| **ஓ** | | |
| ஓரிடமுந்தங்காம | ... | ௨௮ |
| **க** | | |
| கண்ணகன்ற | ... | ௧௩ |
| கண்ணெச்சில்சாலக் | ... | ௨௫ |
| கதிர்முன்பனியாக் | ... | ௩௭ |
| கமலமுகை | ... | ௩௩ |
| கல்லாதனவெல்லாங் | ... | ௩௭ |
| கழிபலவாந்தெய்வக் | ... | ௨௯ |
| கற்றோர்களெல்லாங் | ... | ௨௭ |
| கனவாமுலகாற் | ... | ௨௪ |
| **கா** | | |
| காதலாலெற்கு | ... | ௭ |
| காதுற்றவேங்கடவன் | ... | ௩௧ |
| காந்தியழிந்து | ... | ௧௯ |
| காந்தியெழுஉங் | ... | ௨ |
| **து** | | |
| துடித்துவெறித்த | ... | ௨௪ |
| குணங்குறிக | ... | ௧௭ |
| **கோ** | | |
| கோச்சைமடமாக்கள் | ... | ௨௫ |
| கொடியேனையாண்ட | ... | ௫ |
| கொன்றதுதான் | ... | ௧௯ |
| **ச** | | |
| சங்கரனேநீயாச் | ... | ௨ |
| சச்சித்தே | ... | ௧௦ |
| சச்சிதானந்தமாங் | ... | ௨௬ |
| சமர்த்தர்க்கிலக் | ... | ௩௯ |
| சமையாதவெம்மைச் | ... | ௨௯ |
| **சா** | | |
| சான்றோர்நடுநின்று | ... | ௩௬ |
| **சி** | | |
| சித்தசுத்தி | ... | ௧௦ |
| சிந்தைசிவமாகச் | ... | ௧௧ |
| சிமயந்தொறு | ... | ௧௧ |
| சிவனேரமண | ... | ௨ |
| **சீ** | | |
| சீடனொருவன்றன் | ... | ௩௮ |
| **சு** | | |
| சும்மையாம்வெற்றுரை | ... | ௨௭ |
| சுரமரம்போற் | ... | ௨௪ |
| சுற்றக்குழாம்பலவுஞ் | ... | ௩௮ |
| **செ** | | |
| செருவிளையுஞ்சித்தஞ் | ... | ௩ |
| செல்வச்செவி | ... | ௧௩ |
| செவ்வேளேநீயாகச் | ... | ௫ |
| **சே** | | |
| சேய்க்கன்றருள் | ... | ௬ |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **ஞா** | |
| ஞானசிகாமணியே ... | ௨௧ |
| ஞானந்தவாத ... | ௨௧ |
| ஞானவரையாக ... | ௩௧ |
| **த** | |
| தஞ்சமடைந்த ... | ௬ |
| தடவருவிபாயுந் ... | ௨ |
| தண்ணென்றருள் ... | ௩௨ |
| தந்தைதளர் ... | ௧௧ |
| தலையாந்தலை ... | ௧௨ |
| தவராஜயோகத் ... | ௩௩ |
| தன்கையிற்பிள்ளை ... | ௭ |
| தன்மமேதோர் ... | ௩ |
| தன்மயமாயுற்ற ... | ௧௮ |
| தன்னிலை..னிருந்து ... | ௩௪ |
| தன்னிலை..னிருந்தே ... | ௩௭ |
| தன்னேரிலாத ... | ௨௩ |
| **தா** | |
| தானந்தமில்லாத் ... | ௮ |
| **தி** | |
| திட்டிவிடமாக் ... | ௨௫ |
| திருவேங்கட..செவ்வேள் | ௧௪ |
| திருவேங்கட..தேவனூர். | ௧ |
| திறல்சேர்விபுதர் ... | ௨௧ |
| **து** | |
| துளக்கமேயில்லாத் ... | ௧௦ |
| **தூ** | |
| தூர்ப்பரும் ... | ௩௯ |
| **தெ** | |
| தெறுதிசைத் ... | ௭ |
| **தே** | |
| தேய்ப்பரியமாயச் ... | ௩௯ |
| தேனுந்துசெந்தாமரை... | ௩௧ |
| **ந** | |
| நஞ்சுணவுட் ... | ௧௯ |
| நன்னிலையாஞ்சித்த ... | ௧௮ |
| **நா** | |
| நாவுக்கரசை ... | ௩௮ |
| **நி** | |
| நிசரதமாஞ்செம்பொருட்க | ௨௪ |
| நின்னைப்பணிந்த ... | ௮ |
| நினைத்துவரு ... | ௧௫ |
| **நீ** | |
| நீதநிலைநில்லாதே ... | ௩௯ |
| நீயேகதி ... | ௧௫ |
| நீருகவெந்து ... | ௯ |
| **நெ** | |
| நெருப்புமயமாக ... | ௩௦ |
| நெறியாதெனை ... | ௨௪ |
| **ப** | |
| பக்குவமேயில்லாப் ... | ௩௨ |
| பத்துத்திசையும் ... | ௨௫ |
| பண்டறியேனந்தப் ... | ௪௦ |
| பந்தமெலாநீங்கிப் ... | ௮ |
| பன்னிரண்டுவெங் ... | ௪ |
| **பா** | |
| பாண்டச்சிறையி ... | ௩௧ |
| பாண்டிச்சுழியற் ... | ௧௪ |
| பாண்டிப்பதி ... | ௪ |
| **பி** | |
| பித்தம்பிடிப்பித்த ... | ௧௬ |
| பித்தாகமுற்றிலும் ... | ௩௨ |
| பிறவாதேயென்றுமொரு | ௩௬ |
| பிறவிப்பெருங் ... | ௧௩ |
| பிறவியழித்தென்னைப்.. | ௨௩ |
| **பு** | |
| புக்கிலையேவேட்டுப் ... | ௨௩ |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| புத்தேளிர் ... | ௧௪ |
| புன்புலாலொன்றோ ... | ௩௨ |
| **பூ** | |
| பூக்கமழும்பூங்கா ... | ௧௨ |
| பூச்சியனுநீயுமே ... | ௨௨ |
| **பெ** | |
| பெருந்தகைசேர் ... | ௨௦ |
| **பே** | |
| பேசாக்கடவுட் ... | ௨௭ |
| பேர்ந்தாளோ ... | ௮ |
| **பொ** | |
| பொல்லாக்கொடும்பிணி | ௫ |
| பொல்லானிவ ... | ௧௧ |
| பொன்னேயாதிப் ... | ௨௫ |
| **போ** | |
| போக்குவரவில்லாப் ... | ௧௭ |
| **ம** | |
| மதியையகப்படுக்கு ... | ௨௪ |
| மரணத்தறுவாய் ... | ௯ |
| மருள்சேர்மனத்தோ ... | ௨௮ |
| மனுநிகளுக் ... | ௬ |
| **மா** | |
| மாச்சிரமமின்றாக ... | ௩௫ |
| மாயோன்மகிழு ... | ௬ |
| மாரிபோலெற்கு ... | ௧௭ |
| மாலயனுங்காண ... | ௧௭ |
| மானுபிமான ... | ௩௨ |
| **மு** | |
| முன்னந்துயருழந்த ... | ௧௭ |
| முன்னைப்பல ... | ௨௨ |
| **மூ** | |
| மூர்த்திதலந்தீர்த்தம் ... | ௩௫ |
| மூவருமேகாணுத ... | ௩௦ |
| **மே** | |
| மேத்தவுமேவிந்தை ... | ௪௦ |
| மெய்ப்பொருளைக் ... | ௨௭ |
| மெய்யால்விளங்கிய ... | ௧௩ |
| **ய** | |
| யமுனுநதிதீரத் ... | ௪௧ |
| **ர** | |
| ரமணன்மேல் ... | ௪௦ |
| **வ** | |
| வடவரையின்மேலே ... | ௨ |
| வத்துநிலைக்கேற்ற ... | ௧௫ |
| வருவோர்சிலவுரையால்.. | ௩௭ |
| **வா** | |
| வாயையடக்கினேன் ... | ௨௮ |
| வாலரமணேசன் ... | ௩௫ |
| வாழ்வுதரு ... | ௨௦ |
| வானவர்தாம்வாழ்த்தருணை | ௪௦ |
| **வி** | |
| விண்ணோருமெய்தா ... | ௧௦ |
| வில்வத்தழை ... | ௩௯ |
| வினைவிளைவுக்கேற்ற ... | ௨௭ |
| **வீ** | |
| வீரவடிவான ... | ௧௨ |
| **வெ** | |
| வெண்டாமரைத்தவிசில் | ௧ |
| வெற்பருணைபோல்வான் | ௨௩ |
| **வே** | |
| வேங்கடவன் ... | ௩௭ |
| வேங்கடவா ... | ௨௮ |
| வேட்கையுறு ... | ௩௧ |
| வேண்டியே ... | ௧௫ |
| வேதசிரத்தில் ... | ௩௦ |
| வேலாயுதா ... | ௯ |
| வேற்சேவகம் ... | ௧௨ |

# ஸ்ரீ ரமணதேவ மாலை

# *குறிப்புரை

1. மானை - மான்போன்ற வள்ளிநாயகியை. ஆனை முகத்தான் அருள் தருவான்.

2. பாலிக்கும் பொருட்டுக் கரியாக்கும். தரிசித்தவர்களைச் சாட்சி மாத்திரமாக்கும் என வேறொரு பொருள் தோற்றுதல் காண்க.

4. காந்தி - தவித்து.

5. 'சங்கரனைத் தந்தையெனச் சாற்றியதென்' என்பது, பகவான் மதுரையை விட்டுத் திருவண்ணாமலைக்குப் புறப்படும்பொழுது தந்தையைக் காணச் செல்வதாக எழுதி வைத்து வந்த செய்தியைக் குறித்துக் கூறியபடி.

6. சடையோன் உருச்சார்ந்து நிழலுளான் எனக் கூட்டுக. அண்ணாமலையிற் சிவபெருமான் உத்தரசிகரத்தில் ஆலமரத்தினடியிற் சித்தவுருவந்தரித்து எழுந்தருளியிருக்கின்றாரென்பது புராண வரலாறு. "அவ்வரை, உத்தர சிகரத் தோருவருங் காணு, தத்தரு சித்தனு யானிழ லமர்ந்தோன்" (ஸ்ரீரமண சந்நிதிமுறை - கீர்த்தித் திருவகவல் 146 - 148) என வருதலுங் காண்க.

7. ஆச்சிரமத்தேத்து - ஆச்சிரமமாகிய இடத்தில்.

---

* இது, கலைமகள் துணையாசிரியர் - வித்துவான், திரு கி. வா. ஜகந்நாதையரால் எழுதிச் சேர்க்கப் பெற்றது.

9. இலகும் உருத்தக்க சோணை - சுடர்விட்டு விளங்கும் அழகு மிக்க திருவண்ணுமலை. சிவம் இலகும்; அதனைக் காண்மின் எனக் கூட்டிப் பொருளுரைத்தலும் ஆம்.

10. கீரற்கு - நக்கீரருக்கு. ஆற்றுப்படை - திருமுருகாற்றுப்படை. அருளாகிய பேரமுதை ஆரும்படி கொடுப்பாய்; ஆர்தல் - நுகர்தல், உண்ணுதல்.

11. ஏதோர் பொருளும் தன்மஞ் செய்ய மாட்டாதேன் என்க. வன்மம் - பகை; இங்கே அதன்மம்; சலஞ்சாதித்தலுமாம்.

12. இரவின் சமயம் - இரவாகிய பொழுது; அதனைத் தேர்தல் என்றது, காம நோக்கத்தால் அக் காமநுகர்ச்சிக் குரிய பொழுதிற் கருத்தான்றி நிற்றலைக் குறித்தபடி. பிச்சையேற்றற் குரிய பொழுது எனினுமாம்.

13. காரணம் - அவ்வாறு அவை யனைத்துங் காணுமைக்குக் காரணம்.

14. இது செவிலித்தாய் கூற்று. பெண்ணென்று கூறியது ஈண்டு மனத்தை.

15. பவித்தவை முன் - உண்டான அக்கண்களுக்கு முன். நாலேழ் பிறப்பு - நால்வகைத் தோற்றத்தோடு கூடிய எழுவகைப் பிறப்பு. வைத்தூறு - வைக்கோற்போர்.

16. எமாற: கதிபெறவே உய்வித்தலும், பவப்பிணியைச் சுட்டெரித்தலும் பொருளா லொன்றே யாயினும், தண்ணீராகித் தாபத்தைத் தணிப்பா னென்று நினைந்தடைந்த தம்முன் அந்நினைவுக்கு மாருகச் சோதிப் பிழம்பாகத் தோன்றிச் சுட்டெரித்தனன் என, அருளின் விளைவையே எமாற்றம் போலச் சமற்காரமாகக் குறிப்பித்தவாறு. இது, பழித்தாற் போலப் புகழ்ந்த வஞ்சப்புகழ்ச்சி என்னும் அணி.

17. ஞானசம்பந்தர் முருகக்கடவுள் அம்சமென்னும் கொள்கையை இங்கே ஓர்க. மூண்டெழுந்தார் எல்லாரும் போல - பகைமை

யாற் சினமூண்டெழுந்தார் யாவரும் தம் பகைஞரை அழித்தலைப் போல.

19. உன்னிலே - சச்சித்தாம் உன்னிடம். பலவர் - பல வகையான கடவுளர். சிலவரா - சிவபிரான், முருகன் முதலியோராக. அடி நிலமாம் தன்னை - காணப்படுவன எல்லாவற்றுக்கும் ஆதாரமாகிய காண்பானுன தனது ஸ்வரூபத்தை. மோசத்திற்குக் காரணம் தன்னை அறியாத் தவறு ஆகும்.

21. ஆம் காலம் - பக்குவமுண்டாகும் சமயம். அட்டித்தல் - தாமதித்தல்.

22. பகவானுடைய அன்பர் ஒருவர் சில வருஷங்கள் பகவானது தரிசனம் செய்வதற்குச் செல்ல இயலாமல் வருந்தி நிற்ப, ஒருநாள் அவருடைய கனவில் பகவான் மிகவும் இளைத்த திருமேனியோடு எழுந்தருளினர். அத் திருவுருவத்தைக் கண்டு அவ்வடியார் துணுக்குற்று, "இவ்வாறு திருமேனி மெலிதற்குக் காரணம் யாதோ?" என்று வினவ, பகவான், "அடியார்களுடைய ஆதிவியாதிகளை யெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டி நேர்ந்தமையின் இவ்வாருயிற்று" என்று வாய்மலர்ந்தருளினர். இச் செய்தியை அவ் வடியார் விழித்தெழுந்து யாவர்பாலும் கூறி விம்மித முற்றனர். இந்த நிகழ்ச்சியை நினைந்து பாடியது இச் செய்யுள்; ஸ்ரீ ரமண சந்நிதிமுறையிற் கீர்த்தித் திருவகவலிலும், "அன்பர்தம் போல்லா வரிட்ட மனைத்துமேற், றென்புதோ லாத்திரு மேனி யிளைத்தும்" (120-21) என்று இச் செய்தி குறிப்பிக்கப்பெற்றது.

24. சேய்க்கு - மகவாகிய அடியேனுக்கு. நின் சேயாகிய அடியேனது அருமைத்தாய். உயிர்ப்பிணி - பிறவிநோய். மூவகைத் தாபங்களும் நீங்கிய இன்பமாதலின் தடப்பெரும் போானந்தமென மூன்று அடைகள் கொடுக்கப்பெற்றன.

25. அபலையென்பது, உற்ற நோயை ஆற்றும் வலியில்லாதவள் என்பதைக் குறிப்பித்தது.

26. பெருங்கவலை - தாயின் நோய்பற்றி மிகுங் கவலை. மனக் கவல் - மனக்கவலை.

28. அடியார்களுடைய அஞ்ஞானந்தகாரமாகிய இருட்பிழம்பு நீங்கிப் பேரின்பத்துக்குக் காரணமாகிய ஞானோதயமாகும்படி கூவும் சேவலென்க. தெளித்த - தெளிவித்த. அளித்தல் - அருள் செய்தல்.

30. நின்னெரி யென்றது ஞானாக்கினியை; "நின்னெரி யெரித் தெனை நீறாக் கிடுமுன், நின்னருண் மழைபொழி யருணா சலா" (அருணாசல அக்ஷரமணமாலை - 55) என்பது பகவான் வாக்கு.

இது முதல் நான்கு செய்யுட்கள் அன்னையாரின் அவசான காலத்தில் இயற்றியவை.

32. தெனாது திசைத்தலைமை பூண்டோன் - யமன். பாசம் - கால பாசம்.

33. என்கையால் - என்றலால்; என் கையால் ஒப்புவித்தேன் என்று கூட்டிப் பொருளுரைத்தலுமாம்.

34. இதுமுதற் பத்துச் செய்யுட்கள் அன்னை ஆவி பிரிந்த பின் கூறியவை.

பிழம்பைச் சேர்ந்தாளோ.

37. ஆதல் - சிவமயமாயாதல்.

38. இன்பவறிவுண்மை - சச்சிதானந்தம். அன்னை எளியவளே யானாலும், தவத்தா ளாகையால் வெளியுருவாய் மேவினளோ.

39. என்பாகம் - என்பும் ஆகமும். நீபமலர் - கடம்பமலர்.

40. பெற்றெடுத்தாளது வீறு ஆகம் தெடுங்காட்டிற் கண்டது; கண்டது - காணப்பட்டது.

41. அருணாசலம் நினைக்க முத்தி தருவது என்னும் கருத்தை யுட் கொண்டு பாடியது இச்செய்யுள்.

43 வானென்ன - மேகத்தைப்போல. வான்கருணை - பெருங் கருணை.

4

44. அண்ணல் ஆர் என்ன; ஆர் - யார் என்பதன் மரூஉ.

45. 5-ஆம் செய்யுளின் குறிப்பைப் பார்க்க. சுழியல் - பகவான் திருவவதார ஸ்தலம்.

46. அப்பன் - தக்ஷிணாமூர்த்தி; சிவபெருமான் அவதாரமாகிய ஆசாரிய சங்கரனுமாம்.

47. பாவனம் - தூய்மை.

48. காமாதிகள் ஓட அவற்றைக் கட்டழித்த.

49. ஞான உபாத்தி - ஞானாசாரியன்.

50. துளக்கம் - சலனம். காட்சி - மெய்யுணர்வு. விபுதர் - தேவர்.

51. சிமயம் - குன்று. பரம் - பரம்பொருள். இமியும் - இம்மியளவும்.

52. சேந்தனாகிய சேய்; சேய் - குமாரன்.

53. தளர்வு - ஐந்து தொழிலும் இயற்றியமையா லுண்டாய தளர்ச்சி. அதிகரித்து - மேற்கொண்டு. மலைச்சிறையில் - மலைப் பக்கத்தில். புலைச்சிறை - உடற்சிறை, பிறவிச்சிறை. சேதித்தல் - அழித்தல்.

54. புந்தியரண் - புத்தி யகங்கார சித்தமாகிய புரங்களை; புந்தி: உபலக்ஷணம். வேதிகைப் பள்ளி - திண்ணைப்பள்ளிக்கூடம். காதுகை - தண்டித்தல். காதுகைபோற் கட்டழித்தான்.

55. வேற்சேவகம் - வேலாலாகிய வீரத்தொழில். காற்சேவகர் - திருவடித்தொண்டர். ஆணி - உதாரணம். கண்ணோக்கத்தால் ஆடவர் சிந்தையின்கண் ணுள்ள நிறையாகிய அரணை அழிப்பது மகளிர் தொழில்; கண்ணோக்கத்தால் அடியார் சிந்தையாகிய ஆரணை அழிப்பது பகவான் தொழில்; ஒன்றற்கொன்று உவமையாக ஆளப்பட்டது.

56. உண்ணோட்டம் கூட்டும் - அந்தர்முக திருஷ்டி உண்டாக்குகின்ற. கேள்வியாற் பண்ணப்படுகின்ற ஓட்டை. கண்ணோட்டம் - அருட்கண்ணோக்கம். இதயத்தைக் கட்டறுத்தான் - ஹிருதயக் கிரந்திபேதஞ் செய்தான்.

57. சூரபதுமன் எனத் துள் - சூரபதுமனைப் போலத் துள்ளுகின்ற.

58. தலையாந் தலை - சிறப்பாகிய தலை.

59. முண்டகன் - பிரமதேவன்.

61. பொய்யை வெருவா - மாயைக்கு அஞ்சி. பொருள் சேர் புகழ் - மெய்ம்மை சேர்ந்த புகழ் (குறள்).

62. சொல்லளவு - சொல்லளவினும்.

63. ஒவ்வாத - மகளிர் ஊர்வதற்கு ஒவ்வாத. ஊரார் - ஊரினர்; மடலூராத மகளிர் எனலுமாம்.

"யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு" (குறள்). மடலூர்வோர், தம்மாற் காதலிக்கப்பட்டோர் படத்தை எழுதி மடன்மாவில் வைத்து ஊர்தல் வழக்கு. எழுதி விடுவே னெனின் என்றது, எழுதற்கருமையைக் குறித்தபடி. "ஓட்ப முடைக்கூ நுணர்ச்சி யர்தம்" - என ஸ்ரீரமணசந்நிதிமுறை, திருவார்த்தையில் வரும் செய்யுளை ஈண்டைக்கு நோக்குக.

64. பேதுற்று - மயங்கி. உற இளைத்து - மிகஅயர்வுற்று. புணை - தெப்பம். உகைத்து - செலுத்தி.

65. வல்வினையால் - வல்வினை காரணமாக.

67. கூடாது கூடும் திருவருள் - செய்யாமற் செய்யும் திருவருள்; என்றது சங்கற்ப மின்றியே சந்நிதி விசேடத்தால் நிகழும் அருளைக் குறித்தபடி.

68. பித்தாதி - வாத பித்த சிலேட்டுமங்கள். பல்பிணி - உடற் பிணியும் உயிர்ப்பிணியும்.

69. பணிகோ - பணிவேனோ. தந்தை கடம் - தந்தையினது கடமையை. கொண்கன் - கணவன். இதனால், முறையே தாஸ மார்க்கம், சத்புத்திர மார்க்கம், ஸகமார்க்கம், ஸன்மார்க்க மென்னும் நால்வகை நெறிகளுள் எந் நெறியால் யானுன்னை அடைவே னென்றபடி.

70. மாயச் செருக்கு இரண்டு - அவிச்சையால் உண்டாகும் அகங்கார மமகாரங்கள். மாயா வலி - அழியாத வலி. பொன்றித் தேய - தேய்ந்து பொன்ற என மாறுக.

71. போக்குவர வில்லாப் பொருள் - பூரணமான மெய்ப்பொருள்.

73. பேசாப் பெரும்பதம் - மோனநிலை.

74. தத்துவத்தில் - உண்மையில். வேறாக - வேறுபோல.

75. அறிவண்ணுச்சிரமம் - அறிவர்ணுச்ரமம். இறையும் - சிறிதளவும்.

77. பித்தம் - அருள்வெறி. தெருமரல் - சுழற்சி. இளிவரவு - இழிவு.

78. எம்மையினும் - எப் பிறவியிலும். செம்மை - பேரின்ப மயமாகிய செம்பொருள்.

79. இடும்பை - பிறவித்துன்பம்.

"காமியக்கோ ரிக்கை கழல்கடவுண் மாமுனிவர்
தாமியல்பா யாற்றுந் தவமனைத்தும்—காமர்
சுபயோகந் தான்விளைத்துத் தோல்வுலக மக்கட்
துபயோக மாது முணர்"

எனக் குருவாசகக் கோவை (843)யுட் கூறப்படுதலுங் காண்க.

80. ஊக்குவாய் - மிக்குச் செலுத்துவாய்.

81. மூலப்பகுதிப் படர் - மூலப்பிரகிருதியாகிய அவிச்சையால் உண்டாகும் பிறவியாகிய துன்பம்.

82. நாமதிரவியம் - பெரும்பொருள்.

83. பாரிபோல் அத்தைப் பறித்தாயேல்: "பாரி பறித்த பறியும்" என்னும் பாடலை உட்கொண்டு கூறியது. நேர்மை - நடுவு நிலைமை.

84. கோமளம் - முக்திகாந்தையாகிய மெல்லியல்; இலக்கணை. இணங்குவதன் முன்போல - தோய்வதற்குமுன் ஏங்கியது போல. உணங்கி - வருந்தி. அணங்கு "உவ்கை" - தெய்விக

இன்பம். பிணங்குவதை - நழுவி மாறுபடுதலை. "வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா வாயிடை, ஆரஞ ருற்றன கண்" (குறள்) என்பதன் கருத்து ஈண்டு நோக்கற்பாலது.

85. வன்பு - கொடுமை.

86. சின்மயமாய் - அறிவு (சித்) மாத்திரமாய். செறிந்தோய் - நிறைந்தோய். சோம்பல் - செயலற்ற நிலை.

87. எவ்வம் - துன்பம். சங்கை - சந்தேகம். என்னை உணர்ந்துழி உன்னை யுணர்ந்தெய்த வொண்ணும்.

88. தீர - முற்றும்.

89. காந்தி - வெம்பி. தேஜஸ் வெப்பத்தோடு கூடியதாதலின் அதனின்றும் வேறுபடுத்தக் காந்தலிலாத் தேசன் எனப் பட்டது.

91. இணையின்றென - இடும்பை தருவதில் ஒப்பில்லாத தென்று. இந்நிலை யென்றது, முற்பாட்டிற் கூறிய குடும்பக் கொடுநெறியில் நிற்றலை. இறைவன் ஆன்ம ஸ்வரூபமாகவே இலகுதலால் அந்நிலையே என்னிலையெனக் குறிக்கப்பெற்றது.

92. உள்ளதனையும் - உள்ளவரையில் மாத்திரம்.

93. கொன்றது - அகந்தையை யழித்தது. அகந்தையினின்றும் வேறன்றாக எண்ணியமையின் அஃது முற்ற அழியுங்காறும் அதனைக் கொல்லுந் துன்பம் தன்னையே கொல்லும் மரணத் துன்பமாகக் கருதும் இயல்புபற்றி, 'சித்திரவதை செய்கின்றது' என்று கூறப்பட்டது. ஞானவிழி - ஞானநோக்கம்.

94. காரணத்தாற் பழிசுமத்துகோ. விஞ்சுபுக ழென்றது, புகழ் விஞ்சிய நினக்கு இப்பழி வாராமற் பாதுகாத்துக்கோடல் கடனென்னும் குறிப்புப்பட நின்றது; "கேளா தளிக்குமுன் கேடில் புகழைக், கேடுசெய் யாதரு ளருணாசலா" (அருணாசல அக்ஷரமணமாலை, 22) என்னும் பகவான் வாக்கை ஓர்க.

96. தாழ்வுகள் - இழிகுணங்களும் செயல்களும்.

97. அற்றார்க்கு அரணுகின்ற நினது. மற்றார் - நின் அன்பரல்லாதார்; அவருக்கு அளத்தற்கரிய பிறவியாகிய பெருங்கடல், நின் அன்பருக்கு ஒரு பசுவின் குளம்படியில் தேங்கிய நீருக்கு ஒப்பாகும்; கடத்தற் கெளிய தென்றபடி.

98. மாழ்கி - மயங்கி. அவல மாக்கடல் - துன்பமாகிய பெருங்கடல். மாட்டேன் - சரணமடையும் ஆற்றல் இல்லாதேன். சரணத்து - திருவடிகளில். சரண் அடைந்தேன் - அடைக்கலம் புகுந்தேன்.

99. ஆற்றிற் கரைத்த புளியாகாது: அதுபோல வாழ்வு பயனின்றியொழியாமல். உண்ணோட்டம் - அந்தர்முக திருஷ்டி. கண்ணோட்டம் - திருவருணோக்கம்.

100. அளி - அன்பு. உண்முகமாய் வேறொன்றும் காணு விதம் - உண்முகப்பட்டு, அதனால் வேறொன்றையும் காணாதபடி. மாறு - கைம்மாறு.

101. தன்னைத்தான் எண்ணும் உணர்வு - ஆன்மவிசாரம். உன்னை யடைந்த வுறுதவ மென்றது, அவனை யடைதலே பெருந்தவ மென்னுங் குறிப்புடையது. உன்னை யடைந்தமையால் ஆன்ம லாபம் பெற்றே னென்பது கருத்து. "ஆன்ம னுழனை யான்ம ணந்ததே, ஆன்ம லாபமென் னுன்ம நாதனே (ஸ்ரீ ரமண சந்நிதி முறை: ரமண கீதம், கரு).

102. விபுதர் - மேலான அறிவுடையோர், என்றது தேவரை; புலவ ரென்னும் வழக்கைக் காண்க. அறவும் - முற்றும். எவ்வம் - துன்பம். அறிவா உளதா அதிசுகமா - மிக்க சச்சிதானந்த ஸ்வரூபமாக. என்னை ஆய்ந்து. ஓய்தல் - உபசாந்தமடைதல்.

103. தவாத - குறையாத. எழிலி - மேகம்.

104. பலர்பலர் - மிகப்பலர். கைம்மகவு என்றது, தன்னுடைய முயற்சி சிறிதும் இல்லாத நிலையைக் குறித்து நின்றது. பலர் இருக்க ஏழையேற்கு மெய்யுணர்ச்சி ஈகைக்குக் கருணை இருந்தவாறு என்! என் - என்ன வியப்பு.

105. பூச்சியனும் நீ - பூசித்தற்குரியவனாகிய நீ. பூச்சியனே - சூன்யத்தன்மையுள்ளவனே; அசத்தோ. பூசகன் - பூசிப்போன். அப் பெற்றியனே - அசத்தோ. அற்றே - அசத்தோ.

106. தன்னினும் வேறாகாத ஒன்றை வேறாக வைத்து அகந்தையுணர்வால் மெச்சக் கருதுதலும் துதித்தலும் பராபத்தி நிலையிற் குற்ற மென்றபடி; சழக்கு - குற்றம். தன்னிழப்பு நிலையான சுத்த மோனமே உண்மை வழிபா டென்பது கருத்து.

107. உயர்ந்து - சிறந்து.

108. அற்புதம் - ஞானஸ்வரூபம். உய்தற்குரிய வேறு சீரிய நெறி இல்லை.

109. என் நேர் எளியவர்க்கும் - என்னை யொத்த எளிமையுடையவர்கட்கும். ஆற்றல் - ஈடாதல்.

110. அருணை வெற்புப் போல்வான். நற்பொருள் ஈது எல் - இதுவே கோடற்குரிய நல்ல பொருள்; ஏற்றுக்கொள்க. துவ்வாமை - வறுமை. நிதி நல்கினன். "வேண்டாமை யன்ன விழுச் செல்வ மீண்டில்லை, யாண்டு மஃதொப்ப தில்" (குறள்); "செல்வ மென்பது சிந்தையி னிறைவே, அல்கா நல்குர வவாவெனப் படுமே" (குமரகுருபரர்) என்றனர் பெரியோரும்.

111. எவலோடு வளமும் இடமும் அளித்தான். குருமூர்த்தி இடம் பொருளேவல் யாவும் அடியேனுக் களித்தான் என்பதாம்.

112. அளிப்பாய் - அருள்செய்வாய். மறதி - சீவபோதமிழத்தல். செறிவு - உபசாந்தம். நினைப்பு மறப் பற்று. இறைமயமா - சிவசொரூபமாக.

113. புக்கில் - நிலையாக இருத்தற்குரிய இடம். இடம் வேண்டினேற்கு அவ்விடமேயன்றி உணவு மளித்தருளினனென்றபடி.

114. அறிவைச் சிக்கவைக்கும் மாயா காரியமாகிய உலகத்தை அறிவுக்கு வசமாக்கியருளினன். "சுவையொளி யூறோசை

நாற்றமேன் றைந்தின், வகைதெரிவான் கட்டே யுலகு" என்பது குறள்.

115. நிசரதமாம் - உண்மைச் சுவையாகிய. மசரதம் - பேய்த்தேர்; கானல். கனவாக - தோற்ற மாத்திரமாக.

116. செத்தேன் - கெட்டொழிந்தேன். ஐயுணர்வு - ஐம்புல வுணர்ச்சி; சந்தேக ஞானமுமாம்.

117. அறியாத்துயில் - தாமத உணர்வால் விளைந்த அறியாமை மேலிட்ட தூக்கம். அறிதுயில் - சத்துவ மேலீட்டால் விளையும் உண்மைத் தெளிவோடு கூடிய உறக்கம். மனமடங்கிய சுத்தநிலை.

118. சுரமரம் - பாலைநிலத்தில் நின்ற தனிமரம். அருஞ்சுரத்தின் மரம்போல அடைந்தார்க் களித்தல் அவற் கியல்பு. உரன் - அறிவின் திட்பம்.

119. குடித்து வெறித்த குரங்கா முளத்தை - கள்ளைக் குடித்து வெறிபிடித்த குரங்குபோல அகந்தைவெறி கொண்ட மனத்தை. எண்ணுமல் எண்ணி யிருப்பார் - மறவாமல் எப் பொழுதும் தியானித்திருப்பவர்.

120. பூனைபோற் கவ்வி: தானே வலிய ஆட்கொண்டா னென்றபடி; இது மார்ஜாலநியாயம். புலிபோல் விழுங்கினு னென்றது தன்மய மாக்கினு னென்றபடி. மன் - எழுவாய்; மிகுதிப் பொருளைத் தர வந்த இடைச்சொல்லுமாம்.

121. வரம் - மேன்மை. யாஞகி நின்ற எனை - பரிச்சின்னமான அகந்தையுருக் கொண்டதோர் உயிராக நின்ற என்னை.

122. திட்டிவிடம் - பார்வையினுற் கொல்லும் ஒருவகைப் பாம்பு. சட்டம் - முறை, பெருமிதமுமாம். தலைசாய்ந்தாய் - உருவழிந்தாய். வாழ்தலென்றது உலகியலொடு பொருந்தி வாழ்தலை. இச்செய்யுள் இரங்கியது போல உவந்தபடி.

123. கண்ணெச்சில் - திருஷ்டி தோஷம். சாவாது சாகின்ற சாவு - சிவபோதம் மேலிடச் சீவபோதம் அழிதல். அவர்க்கு -

கண்ணெதிர்ந்தாருக்கு. உணர்வு - அறிவுடைமையாகும். ஆலத்தி சுற்றுதல் ஒருவருக்கு வரும் தீங்கொழிக்கவேண்டியாதலின், அண்ணலை யெதிர்ந்தாருக்குச் சாவு வாராமற் காக்கச் சுற்றுதல் ஆமென்று கூறப்பட்டது; சாவைத் தீங்கு போல வைத்துக் கூறியது நிந்தாஸ்துதி.

124. கொச்சைமாக்கள் - இழிசினர். மடம் - அறியாமை. சிற்றினஞ் சேர்ந்து மனம்போனவழிச் செல்லுந் தன்மையுடையேனுக்கு, ஆசைபொடித்து ஆன்மநிலையைவிளக்கினன்.

126. எச்சத்தை - எஞ்சியுள்ள பொருள்களை. அச்சத்திற்குக் காரணமாகிய துவிதப்பொருள் ஒன்றும் இலதாக்கினமையின் அச்சமகற்றினு ளெயிற்று. என்றுரை - ஆட்கொள்ளப் பெற்ற அடியாரை.

127. கடுப்பு ஆர் அகந்தை; கடுப்பு - மிக்க கொடுமை. கண்ணுளன் கதிகொடுப்பான்.

128. அடிச்சழக்கு - மூலமான தவறு. முடிச்சு - ஹிருதயக்கிரந்தி.

129. மோன மென்றது மனமிறந்த நிலையை. மனமிறவாது நின்ற விடத்து அகந்தையும் துவிதநிலையும் அச்சமும் உளவாதலின், அஞ்சிவந்தாருக்கு அவ் வச்சம் நீங்க மோனவுரன் அருள்வானென்று கூறப்பட்டது; "இறைவர்களு மஞ்சிப், புகலடையு மோன புரி" (ஸ்ரீரமண சந்நிதிமுறை, திருத்தசாங்கம் - 2 : 3) என்பதூஉம் காண்க.

130. இருப்புமயம் - உளதாதல் மாத்திரமாகிய அசலநிலை; இருப்பென்பது இங்கே உளதாதல், இரும்பு என்னும் இருபொருளும் ஏற்றது. எஞ்சா நெருப்பு - அவியாத ஞானக்கினி. பொருப்புமயம் - அண்ணமலை வடிவம்.

132. ஏந்திய - உயர்ந்த. கொள்கை - கடைப்பிடி. 'ஏந்திய கொள்கையார்' என்பது குறள். ஆந்தரதிட்டி - உண்முக நோக்கம். சார்ந்தார்க்குத் திட்டி யுளதாகச் செய்து சாம்ராச்சியத்தைச் சிட்டித்தளிப்பான். "பாரத்துக் குய்க்துங்கட்

பார்வைபாரீப் பாரைத், திட்டியல் லாலோர் சிட்டிமற் றெவ்வா, றேட்டுமேன் றேட்டியாங் குறுத்து விழிப்ப" (ஸ்ரீ ரமண சந்நிதிமுறை, போற்றித் திருவகவல்: 44—46) என்பதன் கருத்து ஈண்டு ஆராய்தற்குரியது.

133. வினைவிளைவுக் கேற்றவிதம் - பக்குவத்திற் கேற்றபடி. சாவா மருந்து - அமுதம். புத்தமுதமென்றது உபசாந்தத்தை.

134. கடவதா - உண்மையாகக்கடவதாக.

135. பெருஞ்சிலை - பெரிய விக்கிரகங்கள். புலவர் - தேவர்.

136. சும்மை - தொகுதி. நொய்ம்மையால் - எளிதின். கட்டழித்தல் - கன்னிமையழித்தல். கொடியோன் - கொடியவன்; பழிப்பது போலப் புகழ்ந்தபடி; துவசங்கட்டிக்கொண்டவன் எனலுமாம்.

137. ஓடோடி: வழக்கு.

138. வினையென்றது இருவகை வினைகளையும், அவ்விரண்டுமே பிறவிக்கு ஏதுவாகலின். இருப்பாரைப் பிறவி நண்ணாது.

139. மான்மா - மகாத்மா. பாயல் - பாய்தல். சங்கற்பத்தை ஆரம்பத்திலேயே ஒழிக்கவேண்டும். "இளைதாக முண்மரங் கொல்க களையுநர், கைகொல்லுங் காழ்த்த விடத்து" என்பது குறள்.

140. காங்கெயன் - முருகன்; கங்கையின் குமாரன் என்றபடி.

141. மயர் - மயக்கம். வாட்டும்: முற்று. பெயர் வாட்டுமென்க.

142. கழிபல - மிக்கபல.

143. அழகொடு சேர் சுந்தரப் பேறு - அழகம்மையாரொடு சேர்ந்த சுந்தரவாரியனார் பாக்கியம்.

144. சமைதல் - பக்குவமாதல். மோனம் அழகு: "விட்புல மிக்க மெய்ஞ் ஞானவெளி மெய்ய னேழிலோ வியத்தக்கதே" (ஸ்ரீ ரமண சந்நிதிமுறை, திருவார்த்தை). ரமணனது அழகு என்னை அமுதமய மாக்கிற்று.

145. தான் முன்னர் ஒரு தீங்கும் செய்யாவிடினும் காரணமின்றியே தன்னை ஒறுத்தார்க்கு, அவர் செயல் பொறுத்தற்கரிய துன்பத்தைத் தனக்குத் தரினும் அவருக்கு இன்னாத செய்யா விரதமே சிறந்த விரதம்; வதம் - விரதம்; "இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு" என்பது குறள்.

146. வீழ்வார் - விழைந்து வழிபடுவார். வழங்கும் பதம் சிறப்பிக்கும்.

147. வெம்மனர் - பக்குவமில்லாத மனத்தை யுடையோர். பக்குவிகளுக்கேயன்றி அபக்குவிகளுக்கும் அருள்செய்வா னென்றபடி. இம்மையினும் அம்மை யணித்தாக வாக்குதல் அநுபவ ஞானமளித்தலால்; "ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின், வான நணிய துடைத்து" என்னும் குறளை யோர்க.

148. ஆண்டான் தாளும் என்னுடைய தலையும் ஆகிய இவற்றின் சேர்க்கையால் விதி அழிந்தது. யாக்கை - பந்தம், பிறவி. "அவன், கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே" (கந்தரலங்காரம்). ஈதா - இதோ.

149. ஏவலிடை நிற்பார் - இறைபணியில் நிற்பார். முடித்து ஆர்க்கும் - சிரமேற் சூடி ஆரவாரிக்கும்.

150. குருப்பதமாம் - குருபீடமாகிய; குருஸ்தானமாகிய; இலக்கணை.

151. ஒப்படைக்க - அர்ப்பணம் செய்தலினால். கடல்பொரும் - கடலையொத்த. ஒப்படைத்தலினாற் களிப்பு உண்டாம்.

152. இருமை - சென்றனவும் வருவனவும் ஆகிய பிறவிகள்.

153. பாண்டச்சிறை - உடலாகிய சிறை. ஆவியெனை - உயிராகிய என்னை. தொடர் - சங்கிலி. விசிப்புண்டு - கட்டுண்டு. துனிதல் - விரைதல்.

154. ஞானவரை - ஞானத்தின் எல்லை; "மோன மென்பது ஞான வரம்பு" என்பதை ஓர்க. மோனமாகிய பர்வதராஜன்.

155. வேட்கையுறு நல்குரவு - வேட்கையாகிய வறுமை. விழுச் செல்வ மென்றது சிந்தையின் நிறைவை. பூட்கை - உறுதி.

156. செந்தாமரை யிரண்டு என்றது இரு திருவிழிகளை. மோனத்தால் ஆட்கொண்ட.

157. காதுற்ற - அடியாரது அகந்தையைச் செறுத்த; காதளவும் நீண்ட எனலுமாம். காதீற்ற . . கண் என்பது முரண்டொடை. மோதுற்ற - துன்பமாகிய அலைகளால் மோதப் பெற்ற; மோதுதல் - எறிதல்; அடித்தல். "தனியனேன் பெரும்பிறவிப் பவ்வத் தெவ்வத் தடந்திரையா லெற்றுண்டு" (திருவாசகம்) என மணிவாசகருங் கூறுவர். கருத்தாகிய கலத்தைக் கூவி; கலம் - மரக்கலம். பிறவிக் கடற் பட்டுக் கலங்குவார்க்குக் கலங்கரை விளக்கம் போன்றன அவன் கண்கள்.

158. மடவோர் - அறியாமையுடையோர். வாயிற்கடை - வாயில். கண் - திருமுன்.

159. அக்க மலர்க்கு ஆனமுக மாவரேல் - மலர்போன்ற திருவிழிக்கு முன்னிலைப்படுவரேல். முனைவன் சந்நிதியிற் சேர்வார்க்கு ஞானம் எளிதில் உறுமென்பதாம்.

160. எட்டாத வீடு, விண்ணுய வீடு எனத் தனித்தனியே கூட்டுக. வீட்டுக்கும் கண்ணுக்கும் கடை ஒன்றே; கடை - வாயில். திருக்கண் முன்னர்ப் படுவார் வீடடைவாரென்றபடி.

161. பேதுறுத்தாற் போன்று - மயக்கினாற் போன்று. கடாக்ஷத்தாற் சச்சிதானந்தஸ்வரூப மாக்கினு னென்றவாறு.

162. புலால் - மாமிச பிண்டமாகிய உடல்; ஆகுபெயர். அலமந்த - சுழன்ற. மன்பதை - உயிர்த் தொகுதி. பார்வல் - கடாக்ஷம்.

163. அகத்தை - மனத்தை, அகந்தையை. தீயோன் - ஞானக்னி ஸ்வரூபன்; கெட்டோ னென்னும் பொருள் தோன்ற நிற்பது பழித்தாற்போலப் புகழ்ந்தவாறு.

164. கேதமுற்று - துன்புற்று. அஞ்சா - அஞ்சி. பரிந்து - விரைந்து, நீங்கி. நாதனைக் காண்பார் இடும்பைக் கிடும்பை படுப்ப ரென்பதாம்.

166. கமல முகை - தாமரை மொட்டு. இதயக் கந்தி - ஹிருதயக் கிரந்தி. கிரந்தி பேதிக்கப் பெறாத இதயத்துக்குத் தாமரை மொட்டு உவமை; "ஆம்ப லரும்பேன...இருப்பது மிதயம்" (உள்ளது நாற்பது, அநுபந்தம் - 17). கண்டார் தம் மனோநாச வடிவாம் கைவல்ய முறப்பெறுவ ரென்றபடி.

167. இடைந்து - மெலிந்து. செருக்கு - யானென தென்னுஞ் செருக்கு. சாவாது - ஜீவபோதம் அழியாமல்.

168. தவராஜ...சிவஞானயோகி: "ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே நவநாத சித்தர்களுமுன், நட்பினை விரும்புவார்" (தாயுமானவர்).

169. "நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம், மலையினு மாணப் பெரிது" (குறள்) என்பதை ஓர்க.

170. அளித்திறல் - அநுக்கிரக சக்தி. களித்தெறல் - மயக்கத்தால் உண்டாகும் நிக்கிரகம். தெறலளிகள் சேருந் திறலுடையோர் - சாபாநுக்கிரக சக்தியுடையோர்.

172. நிம்மதி - மனமழிந்த பரம உபசாந்தநிலை. தன்மை யென்றது நிறத்தை.

173. முதலில் மனோசாந்தி பெறும்பொருட்டுத் திருவண்ணமலை ரமணாச்சிரமம் சென்று பகவான் திருவருணோக்கத்தால் அதனைப் பெற்ற பின்னர், எங்கிருப்பினும் அவ்வுபசாந்தி கைவரப் பெறுதல் அநுபவமாதலின், உலக முழுதுமே ரமணாச்சிரமமென்று கூறப்பட்டது; "என்னதியா னென்னலற்றே ரெங்கிருந்து பார்க்கினுநின், சந்நிதியா நீபெரிய சாமி பராபரமே" (தாயுமானவர்) என்பதை ஓர்க.

174. வாலன் - ஞானஸ்வரூபி. பகவானை ஒரு ஸ்தாபனத்துக்கே காரணனென்று கூறுவார் மூடர். அந்தர்முக திருஷ்டியால்

இதயத்திற் சென்று சேரும் பரிசுத்தரான மெய்ஞ்ஞான வித்தர் திருக்கூட்டத்திற்குக் காரணமாகிய மூலப்பொருளே அவன்; தக்ஷிணாமூர்த்தி யென்றபடி.

175. மாச்சிரமம் - தாபத்திரயமாகிய பேரிளைப்பு. கண்வளர்த்தும் - உபசாந்த நிலையை அடைவிக்கும். தாய்ச்சி - தாய். அந்த மன்னுயிர்களாகிய மதயானைகளை; அகங்காரவடிவா யுழலுதல் பற்றி அவை மதயானைகளாக உருவகஞ் செய்யப்பட்டன. கண்ணேறு - அவன் திருக்கண்ணோக்கமாகிய சிங்கம். கன்றி அடும் - வெகுண்டு அழிக்கும். "வெறித்த யானைமேல் விழித்த சிங்கம் மேன மேவியோர் முகத்தேறக், குறித்த நோக்கோடு கூடிய மானிடக் குறியது கண்டாமே" (ஸ்ரீரமணசந்நிதி முறை, திருவுருக்கண்ட பத்து, 1). இச்செய்யுள் நிந்தாஸ்துதி, ஸ்ரீ ரமணன் சந்நிதி யடைந்தோர் ஜீவபோதங் கெட்டுச் சிவ போத முறப்பெறுவர் என்பது கருத்து.

176. ஆன்மஸ்வரூபமேயாகிய குருநாதனுடைய அருளின் பயன் ஆன்மநிட்டை யடைவித்தலாம். ஸ்ரீரமணசந்நிதி மாண்பின் உண்மையாவது, ஆன்மஸ்வரூபத்தில் மனமற்ற பரிசுத்த நிட்டையுறும்படி எளிதிற் செய்வித்தலேயாகும். அமனஸ்கம் - மனமற்ற நிலை.

177. தலைவி கூற்று. இதயத்தை என்னென்று நீர் நினைந்தீர். அந்த ஆச்சிரம மென்றது இதயத்தையே. அது சிதாகாச வடிவிற் றாதலின் பெரிய ஆச்சிரமமாயிற்று.

178. எல்லாம் இனிது இருக்குமென ஒரு சொல் வருவித்து முடிக்க. அருள் முதலியன தனித்தனி இருத்தலேயன்றி எல்லாம் ஒருங்கு சேர்ந்தும் இருக்கும்.

179. பொருள்: எழுவாய். ஆர்த்தி - ஆர்வம். அவற்றை யாடினோர்க்கு - அம்மூன்றையுஞ் சேவித்தவருக்கு; தீர்த்தத்துக்கே யுரிய ஆடுத லென்னும் வினை ஈண்டு மூன்றற்கும் பொதுவாகச் சேவித்த லென்னும் பொருளில் நின்றது.

180. உருவால் - உருவோடு. பெயரால் - பெயரோடு. ஆதி குணத்தால் - சத்துவ குணத்தோடு. பனித்த - குளிர்ந்த. அனைவரும் - தரிசித்தார் அனைவரும். வெளி அமரு மென்க.

181. நடுநின்று துணையாம் சொரூபம். கட்புலன் கதுவாத (சுட்டறிவுக்கு விடயமாகாத) ஆன்ம ஸ்வரூபமாக விளங்குதலின், தோன்றாத்துணை யெனப்பட்டது. கனசொரூபம், துணையாஞ் சொரூபம் எனத் தனித்தனியே கூட்டுக. பயன் பெறப்படும் என ஒருசொல் வருவித்து முடிக்க.

182. சுழியல் - பகவான் திருவவதாரஸ்தலம். இறவாது இறத்தல் - சீவபோதமழிதல்.

183. அறவாழி உய்க்கும் - தர்மசக்கரத்தைச் செலுத்தும். பிறப்பான் எவனோ அவனே ரமணன். பிறவாதே பிறப்பான், நின்றே பிறப்பான், உள்ளத்துப் பிறப்பான் எனத் தனித்தனி கூட்டுக.

184. ஒரு சரஸ்வதிபூஜைத் தினத்தன்று, பகவான் எழுந்தருளியிருந்த வேதிகையில் பகவானுக் கருகிற் பூஜைக்காகப் பல புத்தகங்கள் அடுக்கப்பெற்றிருந்த காட்சியைக் கண்டு கூறியது இச் செய்யுள். வேதிகை - திண்ணை. அடுக்கல் - குவியல். ஓங்கு அடுக்கல் - உயர்ந்த மலை. தீங்கட்டி - கற்கண்டு. வெறும் கருப்பஞ்சக்கைமலை - ஆலையிலே ஆடியபின் போகடப்படும் சாரமற்ற வெறும் கருப்பஞ்சக்கைக் குவியல். நூல் ஓங்கடுக்கல், தகைத்து எனக் கூட்டுக.

185. கல்லாதன - பிறர் கல்லாதன. வாய்ப்பேச்சின் மல் - வாக்கு வாதம். கற்றதனால் ஆரும் மற்றையார்.

186. சிலவுரையால் - சிலவுரை காரணமாக. என்ப - என்று கூறுவர். தம்மென்றது வருவோரை. வாயைத் திறத்தலே உபதேசத்தை அடைப்ப தாகின்றது. வருவோர் பேசும் உரை பகவானது மௌனோபதேச தாரையை இடையே மறிப்பதாகுமென்றபடி.

187. தன்னிலையில் - ஆன்மஸ்வரூபத்தில். அவன் முன்னிலையில் - பகவானது சந்நிதியில். ஊற்றமொடு - உறுதியோடு. வாளாமை - கருவி கரணச் சேட்டை ஒழிந்திருத்தல். உரவோர் - மனவலியுடையோர். ஆற்ற - பெரிதும்.

188. கழலும் - நழுவும். பதி - தலைவன். சதிபோல் - கற்புடை மகளைப்போல. உழுவலன்பு - எழுமையுந் தொடர்ந்த அன்பு. துயர் கழலுமென்க.

189. பிறு அண்டு - வேறிடத்தில். மாந்தர் கனவிலும் பிறண்டுச் சென்று அடையும் பேறு இல்லவே யில்லை.

190. குருவின் அருளாற் பெறப்படும் மனோநாசத்தைச் சிந்தைக் கொலையாக்கி, அதனாற் குருவுக்குத் தோடம் நேருமென்று சீடன் அழுங்குவதாகக் கற்பித்துக் கூறியது; இது நிந்தா ஸ்துதி. அழுங்கச் செய்தல் - சீடன் அழுங்கும்படி குரு செய்தல். அருள், செய்தலனைத்தோ என்க.

191. சுற்ற - சுற்றிலும். குழாம் - அடியார் திருக்கூட்டம். பறைகின்ற - சொல்லுகின்ற. பகலை யிரவெனச் சொல்லும் சட்டமிருப்பின் அதன்படியென்று இதனைக் கூறலாம். சான்ம் - சாலும்; பொருந்தும். இது பழித்ததுபோலப் புகழ்ந்தபடி.

192. சிவபெருமான் முயற்சியுடையாருக்கு ஒரு நோய் தீர்த்தான்; குருநாதன் முயற்சியில்லாதேமுக்கு எல்லா நோயுந் தீர்த்தானென வாசி கூறியபடி.

193. அதி நளிர் - மிக்க குளிர்ச்சி. அருஞ்சுரம் - தீர்த்தற்கரிய வெப்புநோய். ஏதம் - பிறவித் துன்பம்.

194. சமர்த்தர்க்கு - அறிவாற்றல் படைத்தோருக்கு. இலக்கு ஆவ - லக்ஷ்யமாவன. தாரணிமாதேவர் - பூசுரர்; மறையோர். இயம்பாது இயம்பும் மொழி - கூறாது கூறும் மௌனோபதேசம். சுருதிகளின் சொற்கள் சமர்த்தர்க்கு இலக்காவன; எமக்கு ரமணன் மொழியே இலக்கு.

195. அச்சம் அகன்றேடவும் உரன் எய்தவும் இறைவன் அருளிருக்க. பேது - அறியாமை. ஆண்டான் அருளிருக்க அடியார் கவலுறுதல் அறிவுடைமையன் றென்பதாம்.

196. தயை, தன்னை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் மனத்தை யுருக்கும் என்றவாறு.

197. குருநாதனுகிய ரமணனது ஆச்சிரமம்.

198. தொடக்கு - பந்தம். விறல் - மெய்ஞ்ஞானவுரன்.

199. மாயச்செருக்கு இரண்டு - அறியாமையா லுண்டாகும் யானெனதென்னும் செருக்குக்கள். மாயம் - மாயை; அவிச்சை.

200. எண் கூடா - எண்ணுதல் கூடாத. ஏகக்கண் - மெய்ஞ்ஞான நேத்திரம்.

201. அன்பரை வேண்டி - அன்பரை ஆட்கொள்ளவேண்டி.

202. ஏனையோர் சும்மா விருத்தலே மிக வருமை யென்பார்; எமக்கு எண்ணமிடுத லாகிய இதுவே அருமை. "சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது" (தாயுமானவர்).

203. பக்தியிலாதேற்கும் .. எளிதாக்கி : பக்தியாற் பண்பட்ட மனத்தோரே பிரம்மவித்தை எளிதிற் கைவரப்பெறுவர் என்பது இதனுற் பெறப்படும்.

204. தலைவி கூற்று. அநுராகம் - காதல். நிர்மல உள்ளமாகிய பூஞ்சேக்கை. கமலத் தேன் என்றது ஹிருதய கமலத்திற் சேர்தலா லுண்டாகும் ஞானனந்தத்தை. "மீதுவுண்ட வண்டேனவுஞ் சனக னுதி மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தார்" எனத் தாயுமானவரும் களிவண்டைத் தன்மயானந்தருக்குவமித்தல் காண்க. ஒருருவ மென்றது அவ்வானந்தமே யாய உருவத்தை.

205. விரகதாபம் - பிரிவுத்துன்பம். சமனம் - தணிதல். சரிதா - ஒழுக்கமுடையோய். பகவானைக் கண்ணனுகக் கொண்டு

கோவியர் கூற்றாகக் கூறியபடி.

206. கத்தும் - பயனற்றவற்றைப் பிதற்றும். எண்ணுமாறு - எண்ணும் விதத்தை.

207. செவ்வி - செம்மை. ஆனந்தப்பவ்வம் - இன்பக்கடல்.